பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 07 செவ்வாய்க்கிழமை (22.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 237

# சார்க் மாநாட்டுக் காலத்தில் புலிகள் 10 நாள் போர் நிறுத்தம்!

## ஒரு தலைப்பட்சமாக இன்று அதிகாலை அறிவிப்பு மாநாடு வெற்றி பெறவும் உளப்பூர்வ வாழ்த்து

கிளிநொச்சி, ஜூலை 22

உலக நாடுகளுடனும், தமது பிராந்திய அயல் நாடுகளுடனும் நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்பி நட்புறவை வளர்க்கும் நடவடிக்கையாக கொழும்பில் 'சார்க்' மாநாடு நடைபெறும் காலத்தில் - ஜூலை 26 முதல் ஓகஸ்ட் 04 வரை ஒரு தலைப் பட்சமாக போர் நிறுத்தத்தைப் பேணப் போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று அதிகாலை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அறிவித்திருக்கின்றது.

'சார்க் ' மாநாட்டுக்கு அந்த அமைப்பு தமிழீழ மக்கள் சார்பில் தனது உளப்பூர்வ வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

அதேநேரம், இந்தப் போர் நிறுத்தவேளை யில் அரச படைகள் வலிந்த தாக்குதலில் ஈடுபட்டால், தமது மக்களைப் பாதுகாத் துக்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கையில் மாத்திரம் தமது விடுதலை இயக்கம் ஈடு பட நிர்ப்பந்திக்கப்படும் என்றும் புலிகள் அமைப்பு அறிவித்துள்ளது.

'போர் நிறுத்த அறிவிப்பு' என்ற பெயரில் இன்று அதிகாலை புலிகள் இயக்கம் வெளியிட்ட அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

பரந்துபட்ட தென்னாசியப் பிராந்தியத் தில் பொருளாதார அபிவிருத்தியை மேம் படுத்தி, நீதி, சமத்துவம், சமாதானம் ஆகிய வற்றின் அடிப்படையில் ஒரு புதிய, ஒத்தி சைவான உலக ஒழுங்கை வனைந்து விடும் உயரிய நோக்கோடு, 'சார்க்' மாநாடு பதினைந்தாவது தடவையாகக் கூடுவதை யிட்டு தமிழீழ மக்கள் சார்பில் எமது உளப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' வேளையில் கொழும்புப் பயணத்தைத் தவிர்க்க தமிழர்களைக் கோருகின்றார் அடைக்கலநாதன் எம்.பி.

மன்னார், ஜூலை 22

'சார்க்' மாநாடு முடியும்வரை தமிழர்களை வைத்திய தேவைகள் மற்றும் சில அத்தி யாவசிய தேவைகளைத் தவிர பிற காரணங் களுக்காக கொழும்புக்கு வரவேண்டாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் வேண்டிக்கொள்கிறார்.

'சார்க்' மாநாட்டை ஒட்டி கொழும்பில் தமிழர்கள் பலர் வகைதொகையின்றிக் கைதுசெய்யப்படுகின்றனர். இதனாலேயே தமிழர்களைத் தற்போதைக்கு கொழும்புக்கு வரவேண்டாம் என்று தாம் கேட்டுக்கொள் வதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இளைஞர் சேவை மன்றத்தின் விழா ஒன்றில் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மத்திய அரசின் நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதம் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை22

இந்திய மத்திய அரசாங்கத்தின் நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரும் பிரேரணை மீதான விவாதம் நேற்று ஆரம்பமானது.

பிரதமர் மன்மோகன் சிங் பிரேர ணையை சமர்ப்பித்து உரையாற்றினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் அப்பாவி மக்கள் மீது குண்டுகள் பொழிவதை உடன் நிறுத்துக

## யாழ். ஆயர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, ஜூலை 22

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மக்கள் குடியிருப்புகள் மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்கள், ஆட்லறி ஷெல் தாக்குதல்கள், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள் போன்றவற்றை நிறுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை அவசர கடிதம் மூலம் கோரி யிருக்கின்றார் யாழ். ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

ஜனாதிபதிக்கு அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் முழு விவரம் வரு மாறு:-

தற்போது கிளிநொச்சியில் நடைபெற் றுவரும் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக் கையால் பெரிதும் துன்பம் அடையும் கிளி நொச்சி மேற்கு கரையோர மக்களின் துன் பத்தை கருத்தில்கொண்டு மிக மன வேதனையுடன் இம் மடலை வரைகின்றேன்.

கிளிநொச்சியின் மேற்கு கரையோரம் வாழ் கடலோர கிராம மக்கள் மேற்படி இரா ணுவ நடவடிக்கையால் பெரிதும் பாதிப் புக்குள்ளாகியுள்ள னர். இவர்களில் இன்று முப்பது ஆயிரத்திற் கும் அதிகமானவர்கள் இடம் பெயர்ந்த நிலை யில் பெரும் சொல் லொண்ணா துன்பங் களை அனுபவிக் கின் றார்கள். இவர்களில் பலர் மன்னாரின் மாந்தை மேற்கில் இருந்து கிளிநொச்சி



(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் காணாமல்போன நால்வரில் மூவர் படுகொலை; சடலங்கள் ஒப்படைப்பு

மன்னார், ஜூலை 22

மன்னார் பள்ளமடுப்பகுதியில் வீடுக ளில் இருந்து பொருள்களை ஏற்றுவதற் குச் சென்றபோது காணாமல் போன நால்வரில் மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வட பிராந்திய பார ஊர்திச் சங்கத்தின் பணியாளர்களான இவர்கள், கடந்த புதன் கிழமை காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில் தற்போது இவர்கள் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட் டுள்ளது.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மன்னார் மருத்துவமனையில் படையின

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதி இந்தியாவிடம் அதனை ஒப்படைக்க முடியாது

### அது குறித்துப் பேசுவதற்கு எதுவுமில்லை என்கிறார் கொஹணை

கொழும்பு, ஜூலை 22

கச்சதீவும் இந்திய மீனவர்கள் குறித்த விடயமும் ஒன்றுடனொன்று தொடர்பு படாதவையெனத் தெரிவித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹண, கச்சதீவு இலங் கையின் ஒரு பகுதியென்றும் அதனை இந் தியாவிடம் ஒப்படைக்க முடியாதென்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இணையத்தளமொன்றிற்கு அளித் துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமாதானப் பேச்சு சாத்தியமேயில்லை!

## அர்த்தமற்ற நிபந்தனைகளுக்கு புலிகள் பணியாரென்று நடேசன் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 22

**தமிழர் தாயகப் பகுதிகள் மீது அரசு தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சமாதானப் பேச்சு என்பது எந்தவகையிலும் சாத்தியமற்றது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்திருக்கின்றார்.**

**பேச்சுக்குச் செல்வதானால் அதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டுமென்று அர்த்தமற்ற - சாத்தியப்படாத - நிபந்தனைகளை அரசு முன்வைக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருக்கும் பா.நடேசன், இத்தகைய நிபந்தனைகளுக்கு புலிகள் ஒருபோதும் அடி பணியமாட்டார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்.**

சர்வதேச செய்திச்சேவை ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே நடேசன் இந்தத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கும் நிபந்தனைகள் அர்த்தமற்றவை. தாம் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுக்கொண்டு, விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே போடச்சொல்கிறார். அவரது நிபந்தனைகளைப் புலிகள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.'' - என்று அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

''ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளை முறியடித்து, நிலைமையை தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு உண்டு. அது விரைவில் நடக்கும். ஆனால் மோதல்கள் நடந்து கொண்டிருக்கும்போது பேச்சுகள்நடைபெறுவதற்குச் சாத்தியமேயில்லை.'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

சமீப காலத்தில் இராணுவம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் வெற்றிகளால் சுதந்திர தாயகத்துக்கான விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்பட்டதாகத் தாம் கருதவில்லை என்று குறிப்பிட்ட நடேசன், இராணுவம் கூறும் வெற்றிகளை மாற்றியமைக்க பல தந்திரோபாயங்களை விடுதலைப் புலிகள் வகுத்திருக்கின்றனர் என்றும் சொன்னார்.(அ-சி)

## இளவாலையில் படையினர் சுற்றிவளைப்பு; கிரனேட்டை வெடிக்க வைத்து இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை22

இளவாலை, போயிட்டியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வீடு ஒன்றை படையினர் சுற்றிவளைத்த போது அங்கிருந்து தப்பி ஓடிய இளைஞன் ஒருவர் கிரனேட்டை வெடிக்க வைத்து மரணமானார்.

நகுலேஸ்வரர் வீதி, கீரிமலையைச் சேர்ந்த பொன்னுத்துரை விஜயரத்தினம் (வயது -32) என்பவரே மரணமானவராவார்.

இச் சம்பவம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் நேற்று விசாரணைகளை நடத்தினார்.

மரணமான இளைஞன் தங்கியிருந்ததாகக் கருதப்படும் பெரிய வீட்டைப் படையினர் சுற்றி வளைத்தனர். அப்போது பிரஸ்தாப நபர் தப்பி ஓடினார். அருகில் உள்ள வளவுக்குள் சென்று கிரனேட்டை வெடிக்க வைத்து, அவர் நிலத்தில் வீழ்ந்து விட்டார். அவரது கை, கால்,முகம் ஆகிய உறுப்புக்கள் சிதைந்தன என்று பொலிஸார் விசாரணையின் போது தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட இளைஞருக்கு அருகில் கிரனேட் ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-86-25)

## உயர்தர கலை, வர்த்தக மாணவருக்கு கொக்குவில் இந்துவில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஏற்பாட்டில் ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் பாடத்துக்கு நாளையும் - பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியியலும் ஆகிய பாடங்களுக்கு வியாழக்கிழமையும் -

இந்துநாகரீகப் பாடத்துக்கு வெள்ளிக்கிழமையும் - கருத்தரங்குகள் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## கரவெட்டியில் ஞாயிறு குடும்பஸ்தர் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 22

கரவெட்டி மேற்கில் உள்ள கன்பொல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7. 40 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

அந்த இடத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான வல்லிபுரம் வைத்தியலிங்கம் (வயது-46) என்பவரே சூட்டுக்கு இலக்காகி உயிழந்தவராவார்.

இவர் வீட்டில் இருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபரின் மகன் வீட்டில் இருக்கிறாரா எனக் கேட்ட ஆயுததாரிகள் அவர் இல்லை எனத் தெரிவித்ததும் தந்தையை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸார் அவரது சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்திருக்கின்றனர்.

சம்பவத்தை அடுத்து அவரது மகன் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்தார் எனக் கூறப்பட்டது. (1-203-25-70-218)

### தவறவிட்ட சைக்கிளை பெறுமாறு அறிவுறுத்து

கடந்த 27ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளையில் தவறிவிடப்பட்ட பெண்கள் துவிச்சக்கர வண்டியை, உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் வங்கிக்கு சமுகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார். (01)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் சிவபாக்கியம்

தொல்புரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவபாக்கியம் நேற்று (21.07.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (ஆசிரியர்), இராஜேந்திரா (சிரேஷ்ட ஆண்தாதியர், அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் தாயாரும், செல்வநாயகியின் மாமியாரும், செல்வன் கோபி, செல்வன் அபி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
சோ.இராஜேந்திரா
(மகன்).

(76564)

### செல்லர் பூபாலசிங்கம்

(இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர் நீர்ப்பாசனத்திணைக்களம்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.27, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பூபாலசிங்கம் நேற்று (21.07.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லர் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், Dr.பூவேந்திரன் (U.S.A), ஜெயந்தி (U.K.), Dr.பாலேந்திரன் (U.K.), சாந்தி (Australia), ரோகினி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேகா, Dr.குகதாசன், Dr.கௌரி, Dr.விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற சாந்தகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பரம்சோதி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன் மற்றும் விலோகந்தன் (Canada), காலஞ்சென்ற பாலசிங்கம் (Australia) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.27, 2ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.பரம்சோதி.

(76563)

### விழிநீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் திரு.பூ.மோகனதாஸ் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி பூதப்பிள்ளை பரமேஸ்வரி**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திட்டப்பணிப்பாளரும், அலுவலர்களும்*
*மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

(சி/553846)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை. 22

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட முதன்மை ஆசிரியர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற வுள்ளது.

சகலரையும்கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1)

## ஆடி அமாவாசையன்று பிற்பகலில் சூரிய கிரகணம்

### தர்ப்பணம் மட்டும் செய்யலாமாம்

யாழப்பாணம், ஜூலை 22

ஆடி அமாவாசை தினம் நம் முன்னோர்களை நினைத்து பிதிர்க்கடன் செய்வதற்கு உகந்த நாளாகும். இவ்வருடம் ஆடி அமாவாசை நாள் ஆடிமாதம் 17 ஆம் நாள் (01.08.2008) வெள்ளிக்கிழமையே ஆகும். அன்றைய தினம் பிற்பகல் 4 மணி 51 நிமிடமளவில் சூரிய கிரகணம் ஆரம்பமாகின்றது.

சூரிய கிரகணம் நிகழ இருப்பதால் அன்றையதினத்தில் நடைபெறும் சிரார்த்த கருமங்களை மட்டும் மறுநாள் செய்வதே உத்தமமாகும். ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்களை நினைத்து தர்ப்பணம் மாத்திரம் செய்து கொள்ளலாம் என்று சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

பல ஆலயங்களில் மகோற்சவ கைங்கரியங்கள் நடைபெறுவதால் மாலை 4.30 மணிக்கு முன்னதாக இரவு மகோற்சவத்தை நிறைவு செய்தல் வேண்டும். ஏனைய ஆலயங்களிலும் நித்திய கைங்கரிங்களை இந்நேரகாலத்தை அனுசரித்து நிறைவேற்ற வேண்டும் என்றும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் கேட்டுள்ளது. (அ)


### விற்பனைக்கு

பிரேத வண்டில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: அரிச்சந்திரா,
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(76495)


## சுத்திகரிப்புத் தொழிலாளர் நேர்முகப் பரீட்சை வைத்திய அதிகாரி பணிமனைகளில் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை22

யாழ். பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தினால் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சைகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ரீதியாக தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைப் பகுதிக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24, 25, 26, 27ஆகிய திகதிகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறும்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைப் பகுதியில் 30 வயதிற்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளிற்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29ஆம், 30 ஆம் திகதிகளில் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழையில் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

அதேவேளை -

செயல்முறைப் பரீட்சைக்கு 21, 22 ஆம் திகதிகளில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ள செயல் முறைப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது.

நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை இச் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் நடைபெறும் எனவும் மேலும் அலுவலகம் அறிவித்துள்ளது. (1-202-51)


### மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம்
அவர்கள் 25.07.2008 வரை
யாழில் தங்கியிருப்பதால்
உடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Contact No.: 0777 569205

(சி/553839)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கனகசபை (நைலோன்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகசபை நேற்று (21.07.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்- மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், அருளம்மாவின் (சுவிஸ்) அன்புக் கணவரும், சபேசன்(சுவிஸ்), வரதா(சுவிஸ்), ஜீவா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன்(விசுவமடு), செல்வலட்சுமி (பிரான்ஸ்), பத்மநாதன் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், கனகலிங்கம், கிருஷ்ணபிள்ளை, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணியளவில் உரும்பிராயில் உள்ள அவரின் சகோதரியின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அரச வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
ந.கோபாலகிருஷ்ணன்
(மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் கடைப்பிடிக்கப்படாமையே பிரச்சினை இழுபடக் காரணம்

## பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் கூறுகின்றார்

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவது தொடர்பில், இதுவரை எழுத்திட்ட எந்த ஒப்பந்தத்தையும் இலங்கை அரசு கடைப்பிடிக்கவே இல்லை. இதுதான் இப்பிரச்சினை இவ்வளவு தூரம் இழுபட்டுக்கொண்டிருப்பதற்கு காரணம்.

இவ்வாறு சுட்டிக் காட்டுகிறார் இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் இல.கணேசன்.

தமிழ் இணையத்தளம் ஒன்றிற்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அந்தச் செவ்வியின் விவர ம் வருமாறு:

*இந்தியாவில் அரசு மாற்றம் ஒன்று ஏற்பட்டால் ஆட்சிக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டணி, அவ்வாறு ஆட்சிபீடமேறும் பட் சத்தில் - இம்முறை - ஈழத்தமிழர்கள் விட யத்தில் எந்தவிதமான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?*

ஏற்கனவே, இது தொடர்பில் வாஜ்பாய் மிகத்தெளிவாக கருத்துத் தெரிவித்திருக்கின்றார். இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகள் இப்போது மறுக்கப்படுகின்றன. அந்த உரிமைகளை தமிழரகளுக்கு வழங்குமாறு இலங்கை அரசைக் கோரும் சகல உரிமைகளும் பாரத அரசுக்கு இருக்கின்றது.

இலங்கையில் தமிழர்கள் படும் அவதியைக் கண்டு, பக்கத்திலிருக்கும் பாரதம் சும்மா இருக்க இயலாது. அங்குள்ள விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களை மாத்திரம் காரணம் காட்டி, இலங்கை அரசால் தமிழர்கள்படும் அவதியை பாரதம் காணாமல் இருக்க முடியாது.

*இப்படியான நிலைப்பாடு ஆட்சிக்கு வரும் முன்னர் - கடந்த தடவையும் - இருந்திருக்கின்றதே தவிர, ஆட்சிக்கு வந்த பின்னர் பாரதீய ஜனதாகட்சி ஈழத்தமிழர்கள் விடயத்தில் எந்தவிதமான உருப்படியான - காத்திரமான -நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையே?*

அதற்கு இலங்கையும் ஒரு காரணம். ஒரு முறை இந்திய அரசாங்கம் அதற்கான முயற்சியை மேற்கொண்டபோது, அதற்கு இலங்கை அரசாங்கம் எப்படி நடந்து கொண்டது என்பது உங்களுக்கு தெரியும். அங்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக சொல்லிக் கொள்ளும் விடுதலைப் புலிகள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

பாரத நாட்டில் ராஜீவ்காந்தி படுகொலையான பிறகு, சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு மாற்றத்தின் காரணமாக, பின்னடைவு ஏறபட்டிருக்கின்றது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

*பின்னடைவு என்று நீங்கள் கருதுவது என்ன? ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் உங்களால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க உதவி செய்ய முடியாதுள்ளது என்று கூறுகின்றீர்களா?*

ராஜீவ் காந்தி கொலைக்கு முன்னர், தமிழ் நாட்டிலிருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும்கூட, விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர்களுக்கே மக்கள் ஆதரவு தந்தார்கள். நானே பார்த்திருக்கின்றேன்.

ஆனால், தற்போது நிலைமை மாறி விட்டது. சாதாரணமாக, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லக் கூடியவர்கள்கூட அது குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிக்க தயக்கம் காட்டுகின்றனர்.

*அப்படியானால், முன்னைய நிலை தற்போது இல்லை என்று கூறுகின்றீர்களா?*

ஆம். தற்போது நிலைமை மாறியிருக்கின்றது.

ஆனால், ஆயிரம் காரணமிருந்தாலும், இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்களுக்கான உரிமைகளை - சம உரிமைகளை - பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமை இந்தியாவுக்கு இருக்கின்றது.

ஒப்பந்தங்களையெல்லாம் இலங்கை அரசு கடைப்பிடித்ததைவிட மீறியதே அதிகமாக இருப்பதால், மேற்கொண்டு இவ் வாறு நடைபெறாம லிருப்பதற்கு ஒபபந் தம் செய்து கொண்டால் மாத்திரம் போதாது. அது கடைபபிடிக்கப்படுகின்றதா என்பதை பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்றே நான் கருதுகின்றேன்.



*உங்களின் கட்சி உட்பட எந்தக்கட்சியும் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், சார்பான நிலைப்பாட்டையும், ஆட்சிப்பீடமேறிய பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிவிடுவதாகவும் உள்ளது. அது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?*

இங்கு சூழ்நிலை என்பது முக்கியமான விடயம். அனறுள்ள சூழ்நிலையை பொறுத்துத்தான் அரசாங்கம் முடிவு செய்யும்.

கடந்த தடவை நாம் ஆட்சியிலிருந்த போது காணப்பட்ட சூழ்நிலை உங்களுக்குத் தெரியும். இப்போது இந்த ஐந்தாண்டுகளில் சூழ்நிலை மாறியிருக் கின்றது.

நிச்சயமாக, ஆடசிக்கு வரும் எமது அரசு இப்போது இருக்கின்ற சூழ்நிலையை கருத்திற்கொண்டு பணிபுரியும். அப்படி செய்யும் போது, அது இலங்கை தமிழர்களுக்கு சாதகமாகவும், அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதாகவும்தான் அமையும். அந்த வகையில், நான் நிச்சயமாக எனது அரசாங்கத்துக்கு குரல் கொடுப்பேன்.

மத்தியில் இருக்கின்ற கட்சிகளைப் பார்த்தால், இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளது. ஆட்சியில் பங்கேற்றுங் போன்ற கட்சிகள், மத்தியில் உ வற்புறுத்துவதாக இல்லை. கார னவே இது போன்ற பிரச்சினைகளில [illegible] கையைச் சுட்டுக்கொண்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சி இது குறித்து எதுவும் சிந்திப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாடு பாரதீய ஜனதா கட்சியை பொறுத்தவரை, நாம் இது குறித்து பல்வேறு விதமான கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகளை நடத்திவருகின்றோம். பிரச்சினைகளை தீர்க்கமாக - ஆழ்ந்து - சிந்தித்து வருகின்றோம்.

மலையக தமிழர்கள், வடக்கு-கிழக்கு தமிழர் கள் எல்லோரின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து வருகின்றோம். னெவே, எமது புதிய அரசு வரும் போது நிச்சயமாக ஒரு மாற்றம் தெரியும் என கருதுகின்றேன்.

*இனரீதியான பிரச்சினையாக உள்ள ஈழத் தமிழர்கள் விடயத்துக்கு பகிரங்கமாக குரல் கொடுப்பதற்கு உங்களின் கட்சி தவறினாலும் கூட, உங்களின் கட்சி இந்து மதம் சார்ந்த ஒரு மதவாதக்கட்சி என்ற ரீதியில் பார்த்தால், ஈழத்தில் பாதிக்கப்படுகின்ற இந்துக்கள் குறித்தோ அல்லது அங்கு சிறிலங்காப் படைகளால் அழித்தொழிக்கப்படும் ஆலயங்கள் குறித்தோ உங்கள் தரப்பிலிருந்து எந்தக் கண்டனங்களும் வெளிவரவில்லையே?*

இது மத ரீதியான பிரச்சினை அல்ல. பாரதீய ஜனதா கட்சி இந்த விடயத்தில் தலைபிடவேண்டும் என்பதற்காக இந்துக்கள்தானே தாக்கப்படுகின்றனர் என்று பார்க்கக்கூடாது.

அங்கு பாதிக்கப்படுபவர்கள் இந்துககள் தான் என்று போராடுபவர்கள் குரல் கொடுத்திருப்பார்களேயானால், இன்று நாடு தழுவிய பேரெழுச்சி ஏற்பட்டிருக்கும். அதுபோன்று செய்யத் தவறியதால்தான் இப்போது இந்த நிலமை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

*ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படும் போது - அவர்களுக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்கள் - மேற்கொள்ளப்படும்போது - அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க தயாராக உள்ள நங்கள், பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு எதிரான அரச அடக்குமுறைக்கு போராட்டம் தீர்வு என்று முடிவெடுத்து போராடுகின்றபோது அதற்கு பகிரங்கமான உங்கள் ஆதரவையோ அல்லது கருத்தையோ ஏன் தெரிவிக்க மறுககின்றீர்கள்?*

இல்லை. அது குறித்து நான் கருத்துக்கூற விரும்பவில்லை. ஏனெனில், எப்படிப்பட்ட வழியில் விடுதலை கிடைக்கவேண்டும் என்று முடிவு செய்வது அந்த நாட்டு மக்களின் முடிவு. அது குறித்து நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அவர்களின் முயற்சியை விமர்சனம் செய்யவும் விரும்பவில்லை. எனது கருததையும் எனது கட்சியின் கருத்தையும்தான் நான் சொல்லியிருககின்றேன்-என்றார் அவர்.

---

# அரசாங்க ஊழியரின் வாழ்க்கைச் செலவுப் படி 1000 ரூபாவால் உயரும்; அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 22

அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை மேலும் 1000 ரூபாவினால் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான பிரேரணையை முன் வைத்திருந்தார்.

இதன் அடிப்படையில் அரச சேவை , மாகாண அரச சேவை, அரச கூட்டுத் தாபனம் மற்றும் நிலையியற்சபை ஆகியவற்றின் ஊழியர்களது சம்பளத்தை 1000 ரூபாவினால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பின் படி 22,935 ரூபாவை விட குறைந்த சம்பளம் பெறும் ஆரச ஊழியர்கள், மாகாண அரச ஊழியர்கள் மற்றும் இராணுவ வீரர்களும் இதுவரை வழங்கப்பட்டு வந்த 2500 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 2008 ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 3500 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாதாந்தம் 25,640 ரூபாவை விடக் குறைந்த தொகையை சம்பளமாகப் பெறும் அரச நிலையியற்சபை மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களுக்கும் 1000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பு பொருந்தும்.

இது தவிர மாதாந்தம் 25,640 ரூபாவை விட அதிகமாக சம்பளமாகப் பெறும் அரச நிலையியற்சபை மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களினது வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் 2875 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் பொது நிர்வாக அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களம் என்பவற்றினால் வெளியிடப்படும்.

### பொலீஸ் உப சேவையில் உள்ளோருக்கு...

பொலிஸ் உப சேவையில் 15 ஆண்டுகள் சேவையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள அல்லது மரணமடைந்துள்ள பொலிஸ் உபசேவை உத்தியோகத்தர்களை அவர்களின் முதல் நியமனத் திகதியிலிருந்து ஓய்வூதியம் பெறுவதற்கான உரித்துடையோராகக் கருதுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கருஜய சூரிய ஆகியோர் முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை கடந்த 2007ஆம் ஆண்டு மேமாதம் 23ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம்வழங்கியது.எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டமையினால் சில திருத்தங்களுடன் தற்போது மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி பொலிஸ் உபசேவை ஊழியர்களை நிரந்தர உத்தியோகத்தர்களாகக் கருதுவதோடு முன்னைய அமைச்சரவை அனுமதி கிடைத்த தினம் முதல் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். பொலிஸ் உப சேவை உத்தியோகத்தர் மரணமடைந்திருப்பின் விதவையான அவரது மனைவி அல்லது அவரது பிள்ளைகள் இந்த ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

---

# ஆடிச்செவ்வாய் தினங்களில் விசேட போக்குவரத்துச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆடிச் செவ்வாய் தினங்களில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திற்கு விசேட போக்குவரத்துச் சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித் துறைச்சாலை நடத்தவுள்ளது.

இன்றும், எதிர்வரும் 29ஆம் திகதி, அடுத்தமாதம் 5ஆம், 12ஆம் திகதி ஆகிய தினங்களிலேயே இந்த விசேட சேவை நடத்தப்படவுள்ளது.

பருத்தித்துறை - மானிப்பாய் சேவை 767, 766 பாதையில் காலை 6.15 மணிக்கும் 767 பாதையில் காலை 6.45 மணிக்கும் 753 பாதையில் காலை 9 மணிக்கும் இடம்பெறும்.

நவாலி பருத்தித்துறை சேவை 767 பாதையில் காலை 9 மணிக்கும், வட்டுக்கோட்டை -பருத்தித்துறை சேவை 766 பாதையில் காலை 9.15 மணிக்கும் மானிப்பாய் -பருத்தித்துறை சேவை 753 பாதையில் முற்பகல் 11.30 மணிக்கும் நவாலி - பருத்தித்துறை சேவை 767 பாதையில் பிற்பகல் 2.45 மணிக்கும் ஆனைக்கோட்டை -பருத்தித்துறை சேவை 766பாதையில் பிற்பகல் 3.45 மணிக்கும் நடைபெறவுள்ளது. (202)

---

# யாழ்.கிறீஸ்தவ ஒன்றியம் காரைநகரில் 23 லட்சம் ரூபா செலவில் முன்பள்ளி அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.கிறீஸ்தவ ஒன்றியம் சுமார் 23 லட்சம் ரூபா செலவில் காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் (ஜே/47) மாதிரி முன்பள்ளிக் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது.

இக்கட்டடத்தை சிவகௌரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

காரைநகர் உதவிஅரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து சங்கத்தின் தலைவர் வே.கந்தசாமியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிறீஸ்தவ ஒன்றியத்தின் செயலாளர் வி.பத்மதயாளன், பிரதேச சபைச் செயலாளர் ஆர்.லோகநாதன், கடற்றொழில் பரிசோதகர் என்.மகேஸ்வரன், கிராமசேவையாளர் ஆர்.திருப்புகளூர்சிங்கம், சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன், முன்பள்ளி இணைப்பாளர் செல்வி எஸ்.சுமதி ஆகியோர் உட்படப் பலர் பலர் கலந்து கொண்டனர். (202)

முன்பள்ளிக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கும்போது



---

# பரீட்சைக்குத் தயார்படுத்தும் மாணவர்களுக்கு இரவு நேர மின்வெட்டால் பாதிப்பு என முறைப்பாடு

கரவெட்டி,ஜூலை 22

அடுத்த மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில், ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைகளில் தோற்றவுள்ள தமக்கு இரவுநேர மின்தடை பாதிப்பை ஏற்படுத்துவதாக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவில் மாணவர்கள் படிக்கும் நேரங்களிலேயே மின்வெட்டு இடம் பெறுகின்றது. இதனால் மாணவர்களின் பரீட்சைக்கான மீட்டல்களில் பாதிப்பு ஏற்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து பரீட்சைக் காலத்திலேனும் மின்வெட்டு மேற்கொள்ளாது உதவவேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கில் மானிப்பாய் வீதியின் வடக்குப் பக்கமாக வீதி ஓரமாக மகிந்தினி களஞ்சியத்துக்கு முன்பாக அமைந்துள்ள 'மந்தர ஓடை' என்னும் நி.ப.3 விஸ்தீரண ஆதனமும் கல்வீடும் விற்பனைக்குண்டு. வே.விசுவநாதர், (சுமித்திரன் ஸ்ரோஸ் உரிமையாளர்), கைதடி கிழக்கு, கைதடி. தொ.பே: 060 221 3134


# கட்டடப் பொருள்களின் விலை அதிகரிப்பு பாடசாலை அபிவிருத்திப் பணிகளைப் பாதிக்கின்றது

## ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபர் கவலை

யாழ்ப்பாணம் ஜூலை 22

குடாநாட்டில் நிலவிவரும் கட்டடப் பொருள்களின் அசாதாரண விலை அதிகரிப்பினால் பாடசாலை கட்டடப் பணிகளை பொறுப்பேற்பதில் ஒப்பந்தக்காரர்கள் பின்னடிப்பதாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளார் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலை நூலக கட்டடத்திற்கென 12 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப் பணியினை பொறுப்பேற்பதில் ஒப்பந்தகாரர்கள் பின்னடித்து வருகின்றார்கள். சிமெந்து, கல், மணல், மேசன் கூலி என்பன நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளன. இதனால், மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப கட்டடப் பணியைப் பூர்த்திசெய்யமுடியாது என ஒப்பந்தகாரர்கள் கைவிரித்து விடுகிறார்கள். இதனால் அபிவிருத்திப் பணிகளை விரைவாக முன்னெடுக்க முடியவில்லை.

இதேவேளை,

எமது பாடசாலை மாண வர்கள் பல போட்டிகளில் வெற்றியீட்டி மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் பங்கெடுத்து வருகின்றார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் மாணவர்களை அழைத்து செல்வதற்கு அதிக அளவு பணம் தேவைப்படுகின்றது. நாம் பணத்தைக் கருத்தில்கொண்டு மாணவர்களைக் குறித்த போட்டிகளுக்கு அழைத்து செல்லாது விடுவோமானால் அவர்களது திறமை, வளர்ச்சி, எதிர்காலம் என்பன வீணடிக்கப்படும். எனவே, இந்நிலையைப்போக்குவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் முன்வரவேண்டும் என்றார். (202–127)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22.04.1982

உதிர்வு
02.08.2007

## செல்வன் தணிகாசலம் சசிரூபன்

(யாழ்.உயர்தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்)

திதி: சங்கடகர சதுர்த்தி (22.07.2008)

ஆறாத்துயரில் விட்டு மீளாத்துயில் கொண்ட
எமது அன்புச்செல்வமே!
ஆண்டு ஒன்றானாலும் ஆறாது எங்கள் துயர்.
ஆத்மா சாந்தியடைய இறையருள்
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
'164, கண்டி வீதி, கச்சேரி.



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF MEDICINE

**Academic Programme- Allied Health Science**

The Academic Programme for the 2nd (2006/2007) and 3rd (2007/2008) Batches of Allied Health Sciences (Bachelor of Science in Nursing, Bachelor of Science in Medical Laboratory Science and Bachelor of Pharmacy) will Commence on 1st September 2008.

2008/07/18 **Registrar, University of Jaffna.**



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் பிரதி அதிபருமான திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களது அன்புத் தந்தை

**அமரர் ஆ.வை.பரமலிங்கம்** அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/ பெரியபுலம் ம.வி.



# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூதப்பிள்ளை பரமேஸ்வரி



தெல்லிப்பழை மேற்கு, தையிட்டிப் புலத்தினை பிறப்பிடமாகவும் பிரதேச செயலக வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை பரமேஸ்வரி (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் கந்தையா– நாகமுத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் பூதப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிவயோகம், வனஜா மலர், மோகனதாஸ் (அபிவிருத்தி உதவியாளர், புனர்வாழ்வுப் பகுதி மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் சற்குணநாதன், ராஜனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதேச செயலக வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.

தகவல்: கணவர்,
மக்கள், மருமக்கள்.

## சுப்பிரமணியம் கனகசிங்கம்



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசிங்கம் அவர்கள் நேற்று (21.07.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், நித்தியகாந்தியின் அன்புக் கணவரும், எழில்வேந்தன், எழில்காந்த், எழில்வதனன், எழில்செல்வி, எழில்வதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரவேற்பிள்ளை, பாக்கியராணி, சிவபாக்கியம், பாக்கியலக்சுமி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.07.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு. மனைவி, பிள்ளைகள்.


## கட்டாக்காலி நாய்கள் ஆடுகளை பலியெடுக்கின்றன

யாழ்ப்பாணம் ஜூலை 22

மீசாலை, அல்லாரைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளை கடித்துக்குதறி பலியெடுப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒரு வாரத்தில் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளைக் கடித்துப் பலியெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளைகளில் கூட்டமாக வரும் கட்டாக்காலி நாய்கள் வளவுகளில் கட்டி நிற்கும் ஆடுகளைக் கடித்து, குதறி கொல்வதாகவும் இந் நாய்களைக் கண்டு வளர்ப்பு நாய்கள் குரைக்கின்றபோதும் பொது மக்கள் வெளியே வர அஞ்சுவதால் இந்தக் கட்டாக்காலி நாய் களை கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

## சூரிய கிரகண யாகம்

யாழ்ப்பாணம் ஜூலை 22

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி சூரிய கிரகணம் ஏற்படுவதையிட்டு சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் சிவ சூரிய கிரகண யாகம் செய்ய படவுள்ளது. பிரம்மஸ்ரீ தியாக உமாசுதக் குருக்கள் தலைமையில் யாக பூசைகள் நடத்தப்படவுள்ளன. (202–207)


## அருள்முருகன் திருமணப் பணியகம்

ஒவ்வொரு மணமகன்/மணமகளுக்கும் மனம் நிறைந்த மணமகள்/மணமகன் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றனர். வெற்றிகரமான திருமண நிச்சயங்கள் வேறெங்குமில்லை. பெற்றோரிடமே தங்கியுள்ளன. இவர்கள் அனைவரும் மனநீதிக்குக் கட்டுப்படுகின்றதும் கமிஷன்களையே குறியாகக் கொண்டிராததுமான திருமணப் பணிகளை அணுகுவதன் மூலம் இவற்றை உறுதிப்படுத்தலாம். (அருள் முருகன் திருமண சேவையில் அதிகளவிலான மணமக்கள் உள்ளனர்) இல.03 யாழ்.வீதி, (பெருமாள் கோயில் முன்னெதிர் வீதி) யாழ்ப்பாணம். தொ.பே: 222 9334.



## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள
அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு
நல்லூர் சுற்றாடலில் (கோயில்
வீதியில்) அலுவலகப் பாவனைக்கு
வீடு தேவை.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இல. 021 222 9671
(கிழமை நாள்களில்
மு.ப.9.00– பி.ப.4.00 மணி வரை)



## Wanted-Marketing Officer

A marketing officer is required for a well established organization. The person we have in mind should be reasonably qualified educationally and have knowledge ablity and flair for marketing. Persons with experience will be given preference. If selected he will head a department which will directly deal with marketing strategies. Salary Negotiable.Please apply with curriculam vitae to:

**No.3118, C/O UTHAYAN Jaffna.**



## கண்ணீர் அஞ்சலி

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவர்
அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சேதுநாயகி அப்புத்துரை**

அவர்கள் காலமான செய்தி கேட்டு துயருறுகின்றோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பணிப்பாளர்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்
சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.



# எல்லையற்ற செய்தியாளர்கள்
## REPORTERS WITHOUT BORDER



உதயனின் சர்வதேசப் பதிப்பிலும்
உதயன் பத்திரிகையிலும் உங்கள்
பகுதியின் நிகழ்வுகளையும்
சம்பவங்களையும்
பதிவுசெய்யுங்கள்.
அது ஒன்றும் கடினமானது அல்ல.

உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள்,
ஆலயங்கள், சனசமூக நிலையங்கள்
மற்றும் பொது அமைப்புகளின்
நிகழ்வுகளை எங்களுக்கு
அறியத்தாருங்கள்.
புகைப்படங்களையும்
அனுப்புங்கள்.

பலரும் சேர்ந்துள்ள இந்த அணியில்
நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
இன்றே உரிய தரவுகளுடன் விவரங்களை
news@uthayan.com
photo@uthayan.com
எனும் ஈ-மெயில்களுக்கு அனுப்புங்கள்

புகைப்படங்கள், செய்திகளில் தமது
பெயர்களைச் சேர்த்துக்கொள்ள
விரும்புவோர் அதனைக் குறிப்பிடவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப்சிற்றி' திறப்புவிழா அண்மையில் அச்சுவேலியில் நடைபெற்றது.

நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் த. நடராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஸ் மலர்க்கொத்து வழங்கி வரவேற்கப்படுவதையும் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.பிரதேச முகாமையாளர் வி. சண்முகநாதன் உரையாற்றுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் : அச்சுவேலிச் செய்தியாளர்)

# அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க கிராம மட்டத்தில் தலைவர்கள் உருவாக வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 22

பிரதேச மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க கிராம மட்டத்தில் தலைவர்கள் உருவாக வேண்டும்.

கிராம மட்டத்தைச் சரியாகக் கற்று அதன் வளர்ச்சி, அபிவிருத்திக்கு முழுமையாக பங்களிப்பு செய்வதன் மூலமே பிரதேசமட்ட அபிவிருத்தியை மேம்படுத்த முடியும்.

மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபரும் மீள் எழுச்சித் திட்டப் பிரதிப் பணிப்பாளருமான வே.விசுவலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் அண்மையில் தலைமைத்துவப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் அரச அதிபராக நான் கடமையாற்றிய காலத்தில் அங்கு உயிர்ப்புள்ள நிறுவனங்களாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது அமைப்புகள் என்பன திகழ்ந்தன.

அதன் ஊடாக கிராமிய மட்ட மக்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

மக்களால் இனங்காணப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களும் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த வகையில் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமிய தலைவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகின்றது.

இப்பயிற்சியை பூரணமாக பெற்று முழுமையான பயனை அடைந்து சமுதாயத்திற்கும், அல்லலுறும் மக்களுக்கும் உதவ முன்வர வேண்டும் - என்று கூறினார்.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற்றுகையில்:

கிராமிய மட்ட தலைவர்கள் மக்களது பிரச்சினைகளை இனங்கண்டு எனக்கு அறியத் தாருங்கள். அதன் மூலம் அபிவிருத்திக்கும், பிரதேச வளர்ச்சிக்கும் கொண்டு செல்லலாம் - என்றார்.(203-95)

## ஆடு திருடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூலை 22

வேலணை செட்டிப்புலம் 2ஆம் வட்டாரப் பகுதியிலுள்ள வீடொன்றில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு ஒன்று திருட்டுப் போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

சர்வசுந்தரம் சிவலிங்கம் என்பவரது வீட்டிலேயே கடந்த 17ஆம் திகதி இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. (203)

## தீவகப் பகுதிக்கு சீரான பஸ்சேவையை வழங்குக அரச அலுவலர்கள் விடுத்துள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 22

தீவகப் பகுதிகளில் கடமை புரியும் அரச அலுவலர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சீரான பஸ் சேவையை நடத்த உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளில் பெருமளவான அரச அலுவலகங்களில் பெண்களே கடமை புரிகின்றனர்.

இவர்கள் கடமைக்குச் செல்லும் போது அவர்கள் பயணிக்கும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அலுவலர்கள் கூறுகின்றனர்.

போக்குவரத்து வீதிகள் சீரில்லாது உள்ளமையும் பஸ்கள் பழுதடைவதற்கு காரணமாக அமைகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, பயணிகள் பாதிக்கப்படாத வகையில் சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203 -95)

## வடமராட்சியில் 3 கிராமங்களின் விவசாயிகளுக்கு உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு உள்ளீடுகள்

கெருடாவில், ஜூலை 22

எவ்.ஏ.ஓ நிறுவனத்தின் நிதி உதவியுடன் சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் கெருடாவில் தொண்டைமானாறு தெற்கு, இமையாணன், உடுப்பிட்டி தெற்கு, ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 129 விவசாயிகளுக்கு உப உணவுப் பயிருக்கான தானியமும் உரப் பசளையும் வழங்கப்பட்டன.

கெருடாவில் தெற்கில் 30 பேருக்கும் வடக்கில் 23பேருக்கும் கிழக்கில்37 பேருக்கும் தொண்டைமானாறு தெற்கில் 15 பேருக்கும் இமையாணனில் 14 பேருக்கும் உடுப்பிட்டியில் 10 பேருக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

குரக்கன், கௌபி போன்ற தானியங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

பயனாளிகளுக்கான பயிற்சிகளை வடமராட்சி வடக்கு விவசாயப் போதனாசிரியர் எஸ்.சிவகுமார் கெருடாவில் அம்பிகை கல்வி மன்றத்தில் வைத்து வழங்கினார். (203)

## ஆயுள்வேத மருந்து உற்பத்தி நிலையங்களை பதிய அறிவுறுத்து

கொழும்பு,ஜூலை 22

இலங்கையிலுள்ள ஆயுள்வேத மருந்து உற்பத்தி நிலையங்களை 2009ஆம் ஆண்டிற்காகப் பதிவுகளைப் புதுப்பிக்கும் விண்ணப்பங்களை ஆயுள்வேதத் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் ஆர்.சி. டபிள்யூ குணவர்த்தன, ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதத் திணைக்களம் கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வருடாந்தப் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாது பொது மக்களுக்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக எந்தவித ஆயுள்வேத மருந்துகளையும் உற்பத்தி செய்தல் சட்ட விரோதமான தண்டனை பெறக்கூடிய குற்றமாகும் என ஆயுள்வேத ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (202)

## உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பகால உறுப்பினர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூலை 22

உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பகால உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் முகாமையாளர்களின் மறைவுக்கு பெற்றோர் சங்கக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டம் தலைவர் திருமதி மில்ஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அஞ்சலி செலுத்தப்பட்டது. (203-86)




நவாலி வை.எம்.சி.ஏயினால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் 'மகுடம்' சஞ்சிகை 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' என்னும் கலந்துரையாடலில் வைத்து அண்மையில் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.சந்திரமௌலி உரையாற்றுவதையும் பிரதேச சபைச் திருமதி ஜெ.பு.சிவலிங்கம் மற்றும் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (100)

## சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை 22

சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடிக்க கடந்த சனிக்கிழமை தொடக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களாக மீன்பிடிக்கத் தடை செய்ததால் இக்கடலேரியில் தொழிலில் ஈடுபட்ட கோயிற்குடியிருப்பு, அல்லாரை, மீசாலை, சப்பச்சிமாவடி ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஐந்து கலைஞர்களுக்கு மகேஸ்வரனின் ஞாபகார்த்த விருது

யாழ்ப்பாணம்,ஜூலை 22

காரைநகர் பிரதேச கலை இலக்கியப் பெருவிழாவில் ஐந்து கலைஞர்களுக்கு முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற கலை இலக்கியப் பெருவிழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலைஞர்களுக்கு விருதினை வழங்கிக் கௌரவித்தார்.

கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்களுக்கு 'கலைஞானச்சுடர்' பட்டமும் சிவசரவணபவன் (சிற்பி), ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக கலைப்பணியில் ஈடுபடும் தவில் வித்துவான் என்.கே.விராசாமி, நாதஸ்வர வித்துவான் கே.பவப்பிரியன், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் புலவர் வே.குமாரசாமி ஆகியோருக்கு கலைச்சுடர் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (203-250)

## மாணவர்கள் பல மொழிகளையும் தெரிந்துகொள்வது அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிசெய்யும்

### வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

சங்கானை,ஜூலை 22

மாணவர்கள் பல மொழிகளையும் தெரிந்து வைத்திருப்பது அவர்களின் முன்னேற்றத்துக்கு வழி செய்யும்.

இவ்வாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பெற்றோர் தின விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு மாணவர்களுக்குத் தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்றைய இந்த நிகழ்வில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலமான சிறப்பான நிகழ்வுகளைக் கண்டுரசித்தேன். உவகை அடைந்தேன்.

இளைய மாணவப் பருவத்திலே எமால் முடிந்தளவு தாய்மொழியுடன் வேறு மொழிகளையும் கற்பது, எமது முன்னேற்றத்திற்கு உதவும் என நினைக்கிறேன். மாணவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் கல்வி கட்டாயமானதாக உள்ளது. அதிபர், ஆசிரியர்கள் ஒரு மாணவனை அறிந்து, அவனை மேல் நிலைக்கு கொண்டுவரும் பாரிய பொறுப்பை ஏற்றுள்ளனர்.

இதனை இவர்கள் உளமார்ந்த மனத்தோடு செயற்பட்டு அவர்களின் கல்வித் தரம் மேம்பட பாடுபட வேண்டும்.

நேரம் என்பது இன்று மட்டுப்படுத்தப்பட்டதொன்றாக உள்ளது. குறுகிய நேரத்துள் பாடசாலைகளில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்க பாடுபட வேண்டியுள்ளது.



இருந்தும் எமது ஆசிரிய சமூகம் சிறந்த தன்னலமற்ற சேவைகளை ஆற்றிவருவது பாராட்டுக்குரியது - எனத் தெரிவித்தார்.

அதிபர் மு.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு.திருமதி நந்தகுமாரன் கலந்துகொண்டு உரையாற்றினர். (203-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 18ஆம் திகதி கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை உரையாற்றுவதையும் நிறுவுநர் உரையை பேராசிரியர் பி.சிவநாதன் நிகழ்த்துவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: காந்தன்)

# ஊடகங்களின் பிரச்சினைகளை ஆராயும் அமைச்சரவைக் குழு அதிகாரமற்றதா?

## கேள்வி எழுப்புகிறது சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம்

கொழும்பு,ஜூலை22

இலங்கையில் ஊடக்வியலாளா்க்ள் எதிர் கொள்ளும் நெருக்கடி தொடர்பாக ஆராய் வதற்காக அமைச்சரவை உபகுழு அமைக் கப்பட்ட பின்னர் ஏழு பத்திரிகையாளர்கள் துன்புறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளா கியுள்ளனர் என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் குறித்து அமைச்ச ரவை உபகுழு விசாரணைகளை மேற் கொள்கின்றது என்பதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை என தெரிவித்துள்ள சர்வதேச சம்மேளனம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் பத்திரிகையாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கும் துன்புறுத்த லிற்கும் உள்ளாக்கப்படுகின்றனர். ஊடகவி யலாளர்களுக்கு எதிரான சகல வன்முறை கள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள் வதற்காக அளித்த உறுதிமொழியை நிறை வேற்றுமாறு சர்வதேச பத்திரிகையாளர் சம் மேளனம் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கின்றது.

பத்திரிகையாளர்களின் துயரங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசு அமைச்ச ரவை உப குழுவை ஏற்படுத்தியுள்ளதை இலங்கையின் ஐந்து பத்திரிகையாளர்கள் அமைப்புக்கள் வரவேற்றிருந்தன.

அதேவேளை, விசாரணைகள் குறித்து உடனடியாகவும் வெளிப்படையாகவும் அறி விப்பதன் மூலம் நம்பிக்கையை அமைச்ச ரவை உப குழு ஏற்படுத்தவேண்டும் என் றும் அவை தெரிவித்திருந்தன.

எனினும், இதன் பின்னர் ஊடகவியலா ளர்கள் அச்சுறுத்தப்பட்ட - துன்புறுத்தப் பட்ட ஏழு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அமைச்சரவை உபகுழு இந்த சம்பவங் கள் குறித்து விசாரணை செய்ய முயல் கின்றது என்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. அத்துடன், முன்னர் நடைபெற்ற சம்பவங்களும் விசாரணை செய்யப்படவில்லை.

கடந்த இரண்டு வாரங்களில் ஊடகவி யலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு துன்புறுத் தப்பட்டனர் எனக் கிடைத்த தகவல்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, அமைச்சரவை உபகுழு இலங்கையில் ஊடக சுதந்திரத்தை ஸ்தாபிப்பதற்கோ அல்லது அனைத்து வன்முறைகள் குறித் தும் விசாரிப்பதற்கோ அதிகாரமற்றது என் பது புலனாகின்றது என சுதந்திர ஊடக இயக் கம் தெரிவிக்கின்றது. (சி)

### தாயையும் மகளையும் குரங்கு கடித்துக் காயப்படுத்தியது

யாழ்ப்பாணம்,ஜூலை22

வீதியில் சென்ற தாயையும் மகளையும் குரங்கு கடித்துக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் மீசாலை வடக்கில் இடம் பெற்றது.

சங்கத்தானை, சாரதா வீதியைச் சேர்ந்த பிரகலாதன் புவனேஸ்வரி (வயது 28), இவ ரது மகளான பிரகலாதன் டஸ்மியா (வயது 2½) ஆகியோரே குரங்கினால் கடியுண்ட வர்களாவர்.

மீசாலையில் உள்ள உறவினர் வீட்டுக் குச் சென்றுவிட்டு திரும்புகையில் வீதியைக் கடக்க முயன்ற குரங்கு இவர்களை கடித்துக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த தாயும் மகளும் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-207)

# இலங்கைத் தமிழர்கள் அவலம் குறித்து பிரித்தானியாவில் படக்கண்காட்சி

பிரிட்டன்,ஜூலை22

"இலங்கையில் தமிழர்கள் மீதான 60 ஆண்டுகால ஒடுக்குமுறை" என்ற தலைப் பிலான புகைப்படக் கண்காட்சி பிரித்தா னிய நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

இந்தப் புகைப்படக் கண்காட்சிக்கு இலங்கைத் தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர்கள் குழு ஆதரவு வழங்கியிருந்தது. 88 பிரித்தானிய தமிழ் அமைப்புக்களை உள்ள டக்கிய பிரித்தானிய தமிழ்க் கூட்டமைப் பின் சார்பில் இக்கண்காட்சி நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியை பிரித்தானிய நாடா ளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் அம்மை யார் திறந்துவைத்தார்.

இலங்கைத் தமிழர்களின் துயரங்களுக் குத் தீர்வு காண்பதற்காக அனைத்துலக சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இந்தப் பாரிய அவலத்தைப் போக்குவ தற்கு அரசியல் தீர்வை நாடுவதுகுறித்து அனைத்துலகம் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பி னர் ஜோன் ராயான் அம்மையார் இங்கு உரை யாற்றும்போது தெரிவித்தார். (அ-க)

புதிய இணைப்பிற்கும்,
கட்டணங்கள் செலுத்துவதற்கும்
SATS - TECH
(TRCSL அனுமதி பெற்ற நிறுவனம்)
DIAL: 021 2225908, 2228812
(76366) 0777 710785






பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்



நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.
தெரிவுக்கு முந்துங்கள்
★ நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
★ றெடிமேட் ஆடைவகைகள்,
உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி
பான்சி ரகங்கள், வெடிங் கிவ்ற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்.
பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.
புதிய சாறிகள் சில்வர் ரச், அல்வீனி, அநாரங்கி, வீனே, பிரியங்கா,
கிரசி, கோபி சாறி, ராஜ்குரு சாறி, உருத்திகபிரகாஸ்,
குருவி, துசேலன், கல்பனா சாறி, லக்ஸ்சரி சாறிகள்
அரவிந் மில் - மனிஸ்பொ றெஜின் 1 மீற்றர் 225 /=
அரவிந் மில் - சகோதி றெஜின் 1 மீற்றர் 275 /=
G.S. லிங்கநாதன் அன்கோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் கல்வியிலும் விளையாட்டிலும் முன்னேறி வருகின்றது சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை


விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள்

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கெனப் பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பெரும் தேவையோடு இயங்கி வருகின்றது சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

எனினும் மனம் தளராது இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்யும் முயற்சியில் அயராது உழைத்து வருகின்றார்கள் அப்பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களும்.

இந்தப் பாடசாலை கஷ்டப் பிரதேசத்தில் உள்ளதை அரசாங்கம் ஏற்று ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகையைக் கடந்த பல வருடங்களாக வழங்கி வருகின்றது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தை யாராலும் சரிவரக் கூறமுடியவில்லை. அயலில் நீண்டகாலம் வசிப்பவர்களுக்குக் கூடத் தெரியாத நிலைமை காணப்படுகின்றது.

இன்று இப்பாடசாலை மாணவர்கள் மகிழ்வுடன் கற்பதற்கு வரும் பாடசாலையாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

சில ஆசிரியர்கள் சுமார் இரண்டரை கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் இருந்து வருகின்றனர். ஒரு ஆசிரியை சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் இருந்து வருகின்றார். எனினும் உரிய நேரத்திற்கு மாணவர்களின் நன்மை கருதி சமுகம் கொடுத்து உடற்பயிற்சிகளுடன் பாடசாலையை ஆரம்பிப்பதில் ஆசிரியர்களும் அதிபரும் காட்டும் அக்கறை பெற்றோர்களினால் பாராட்டப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகளும் குறைவு. கஷ்டமான வாழ்க்கை வட்டத்தில் உள்ள மக்கள் மத்தியில் இப்பாடசாலை இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இந்தப் பாடசாலைக்குச் செய்த உதவிகள், அபிவிருத்தியை விட செய்யவேண்டிய உதவிகளும் அபிவிருத்தியுமே அதிகம்.

பாடசாலையின் அதிபரும் ஆசிரியைகளும் மனம் கோணாதவர்களாகவும் உள்ளதைக் கொண்டு நிறைவுசெய்யவேண்டும் என்பதில் முனைப்புடனும் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

அதிபர் க.சண்முகநாதனுடனும் ஆசிரியர்களுடனும் பாடசாலை குறித்து உரையாடியபோது:




பாடசாலைக்குத் தேவைகள் உண்டு. அதனைப் படிப்படியாகப் பூர்த்தி செய்ய முயற்சிக்கவேண்டும். ஆசிரியர்கள் பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் கூட பிள்ளைகளின் வளர்ச்சிக்காக நேரத்தைச் செலவிடுகின்றார்கள்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலையில் பாடசாலை சுற்றாடலில் உள்ள 55 பிள்ளைகள் காணப்படுகின்றார்கள். அதிபரும் மூன்று ஆசிரியைகளும் கடமையாற்றுகின்றார்கள்.

கஷ்டப்பட்ட பிரதேசப் பாடசாலை என்பதற்காக நான்கு ஆசிரியர்கள் அதிபருடன் ஐந்து வகுப்புகளை நடத்துகின்றார்கள் என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

கடந்தாண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு 8 மாணவர்கள் தோற்றியபோதிலும் ஒரு மாணவன் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளான். இந்தாண்டும் கூட 13 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். ஆசிரியர் குழாமினால் பரீட்சைக்குத் தயார்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

மாணவர்களின் திறமை, ஆற்றலில் ஆசிரியர்கள் நம்பிக்கை கொண்டுள்ள போதிலும் ஒரு சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் விழிப்புணர்வு அடையாமை மாணவர்களின் கல்வியைக் குழப்புகின்றது.

மாணவர்களை சீரான முறையில், ஒழுங்

## அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள உதவிகள் பெருமளவில் தேவைப்படுகின்றன

காகப் பாடசாலைக்கு அனுப்பாத நிலைமை காணப்படுகின்றது. இது மாணவர்களின் கல்வியைக் குழப்புவதுடன் ஏனைய மாணவர்களின் கல்வியையும் கூட குழப்புகின்றது.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளுக்கும் மாணவர்கள் சென்று வருகின்றார்கள். ஆங்கில ஆசிரியை ஒருவர் இருந்தார். அவரும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதி கிடைத்துச் சென்றமையால் ஆங்கில ஆசிரியரும் இல்லை.

குடும்ப மட்டப் பாடசாலைகளிடையே இடங்களைப் பெற்றுக்கொள்கின்றபோதிலும் கோட்ட மட்டத்தில் இடங்கள் கிடைப்பது குறைவு. விளையாட்டுப் போட்டி என்றால் பாடசாலை ஒரே எழுச்சியாகக் காணப்படும். அயலில் உள்ளவர்கள் உட்பட பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என அனைவரும் வந்து முழுமையான ஒத்துழைப்பை வழங்கி நடத்தி வைப்பார்கள்.


பாடசாலை அதிபருடன் ஆசிரியர்கள்.

இங்கு கற்கும் பிள்ளைகளுடைய பெற்றோர்கள் மிகவும் வறியவர்கள். வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் சுமார் இரண்டு மூன்று கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றுவிட ஏனைய கஷ்டப்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகளே கற்று வருகின்றார்கள். பொருளாதார ரீதியாகப் பாடசாலைக்கு உதவி வழங்கமுடியாவிட்டாலும் கூட தமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் வீட்டிலும் சிறிது அக்கறை காட்டினால் கூடிய அடைவு மட்டத்தைப் பெறமுடியும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நல்ல முறையில் இயங்குகின்றது. பாடசாலைக் கட்டடம் கட்டும் சந்தர்ப்பத்திலும் கூட தமது உடல் உழைப்பைச் சிரமதான முறையில் சங்கத்தினர் வழங்குகின்றனர் என அதிபர் பாராட்டுத் தெரிவித்தார்.

விளையாட்டுப் போட்டி பாடசாலை மட்டத்தில் இடம்பெறுகின்றன. பாடசாலை முற்றமே விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

கல்வி அதிகாரிகள் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருகின்றார்கள். ஆனாலும் அவர்களை மிஞ்சிய விடயங்கள் பல காணப்படுகின்றன.

அதிபரின் அறையே களஞ்சிய அறையாகவும் அலுவலகமாகவும் மற்றும் பொருள்களை வைத்து எடுக்கும் அறையாகவும் காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை இல்லை. ஆசிரியர்களுக்காக மலசலகூடம் ஒன்று காணப்படுகின்றது. அதுவும் கூட பழமை வாய்ந்ததாகவும், திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதாகவும் காணப்படுகின்றது.

மாணவர்களுக்கு மலகூடம் இல்லை. சலகூடம் மட்டுமே உள்ளது. பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் மலசலகூட வசதிகளை ஏற்படுத்தியுள்ளன. தேவை மிகுந்த எமது பாடசாலைக்கு ஏன் வழங்கப்படவில்லையென்பதும் கவலைக்குரிய விடயம்.

குடிநீரைக் கூட குழாய்க்கிணற்றின் மூலமே பெற்றுக்கொள்கின்றார்கள். நீர்த்தாங்கியோ அன்றி நீர்க்குழாய் வசதியோ கூட கிடையாது. மின்சார வசதி இல்லை.

வகுப்பறைகள் ஒரே மண்டபத்தில் நடைபெறுகின்றன. நவீன கற்பித்தல் முறைக்கு ஏற்றவகையில் இல்லை. ஆகக்குறைந்தது வகுப்பறைகளுக்குக் கூடத் தடுப்புகள் தற்காலிகமாகப் போட்டு மறைக்கப்படாது வகுப்புகள் நடைபெறுகின்றன.

தளபாடங்களை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கல்வித்திணைக்களம் வழங்கி உதவியுள்ளது. உலக உணவுத் திட்டத்தின் கீழ் பெற்றோர்களும் இணைந்து செயற்படுகின்றார்கள். மாணவர்களின் தேவைக்கு ஏற்ப உலக உணவுத் திட்டம் நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் தேவை

இன்றைக்கு இப்பாடசாலைக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் பல்வேறு வழிகளிலும் தேவையாக இருக்கின்றது. இந்தப் பாடசாலையைக் கண்டிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் நேரில் வந்து பார்வையிட வேண்டும். இதேபோன்று பாடசாலையின் பரிசளிப்பு விழா விடயத்தில் பெற்றோர்கள், அயலவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கவனம் எடுக்கவேண்டும் - என்றார்.

**புங்கவன்**

பழைய மாணவர்கள், அயலில் வாழும் வசதி படைத்தவர்களுக்கும் கிராமத்தின் வளர்ச்சி, பெயர் விளங்க இப்பாடசாலையை வளர்த்தெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு. பாடசாலை மாணவர்களின் தேவையை கருத்தில்கொண்டு சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனம் புத்தகப் பைகளை மாணவர்களுக்குக் கொடுத்து உதவியுள்ளார்கள். காலணிகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.


மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்று லாவை மேற்கொண்டனர்.
யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் சுற்றுலா சென்ற மாணவர்களும் ஆசிரியர்களும் நிற்பதைப் படத்தில் காணலாம். (1)


ஊரெழு கணேச வித்தியாசாலையில் நீர்விநியோக அமைப்பு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தண்ணீர் விநியோக அமைப்பை பாடசாலையில் நிறுவுவதற்கு அன்பளிப்பு வழங்கிய க.கதிரவேல் தண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பாடசாலை வேலைப்பகுதி பதில் பொறியியலாளர் த.ரவீந்திரதாஸ், பாடசாலை அதிபர் சி.கிரிதரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (72)


[illegible]கொண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அண்மையில் [illegible] வைக்கப்பட்ட சரஸ்வதி சிலையைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்....



புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் இலங்கை வங்கி பொன் அரும்புமன்ற அங்குரார்ப்பண விழாவில் எடுக்கப்பட்ட படம் .இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.எ. அருமைநாயகம், பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன், அதிபர் ந. அனந்தீஸ்வரன் மற்றும் மாணவர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதை படத்தில் காணலாம்



ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் யாழ். மாவட்டக் கிளையில் வாகனத்துக்கான [மினிபஸ்] பூரண காப்புறுதிப்பத்திரத்தினை எடுத்திருந்த சிங்க அரியரட்ணம் என்பவருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுக் காசோலையினை யாழ். மாவட்ட கிளைப் பொறுப்பதிகாரி எஸ்.எ. நிரஞ்சன் வழங்குவதையும் அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி எஸ். பிரபாகரன், மதிப்பீட்டாளர் எஸ். செல்வேந்திரா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



அண்மையில் அகால மரணமடைந்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளரான சுளிபுரத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் சாரதா பரம்சோதியினுடைய நஷ்டஈட்டு கொடுப்பனவை கூட்டுத்தாபன யாழ். கிளையின் நிதியியல் ஆலோசகர் நா.நாகராஜா அவருடைய தாயாரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் உத்தியோகத்தர்களான பவீதன், செந்தூரன், மற்றும் ரஞ்சன் ஆகியோரையும்படத்தில் காணலாம்.



செலிங்கோ இன்சூரன்ஸ் நெல்லியடிக்கிளையின் ஆயுள் காப்புறுதியாளர் கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்தீஸ்வரன் – மகேஸ்வரன் [மோகன்] கடந்த மாதம் அகால மரணமானதையடுத்து கிளையால் அவரது மனைவியாகிய திருமதி சூரியகுமாரி மகேஸ்வரனுக்கு இழப்பீட்டுத் தொகையாக 3லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

நெல்லியடிக்கிளை பிராந்திய முகாமையாளர் ரி. நிரோஜன் காசோலை வழங்குவதனையும் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி. பாஸ்கரன், விற்பனை நிறைவேற்றுனர் ரி. சோபனா ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் கற்கைக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் பொறியியல் உயர் தேசிய பாடநெறிகளுக்கு 2008/2009 கல்வி யாண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு கல்வி உயர்கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முழுநேர ஆங்கில மொழி மூலமான இக் கற்கை நெறியில் குடிசார், மின்சாரம், இயந்திரப் பொறியியல் ஆகிய பாட நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிக விஞ் ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் உயர் தொழில் நுட்ப நிறுவனம், இல.42, ரொட்சிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு - 15' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 18.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(202)

# மனிதாபிமானப் பணியாளருக்கு புதிய கட்டுப்பாடு; ஐ.நா. அதிருப்தி

ஜெனிவா, ஜூலை 22

இலங்கையில் மனிதாபிமானப் பணி களில் ஈடுபட்டுள்ளவர்கள், பாதிக்கப் பட்ட மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் மத்தியில் சென்று பணியாற்றுவதற்கான அனுமதி வழங்கப்படுவது அவசியம் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பணிபுரியும் ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் தொடர்பாக அரசு விதித்துள்ள புதிய நடைமுறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மிச்செலி மொன் பஸிடம் செய்தியா ளர்கள் கேள்வியெழுப்பிய வேளையே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு விதித்துள்ள புதிய நடைமுறைகள் தொடர்பாக கொழும் பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் அனுப்பும் பதிலுக்காகக் காத்திருப் பதாகத் தெரிவித்துள்ள மொன்பஸ் மனி தாபிமானப் பணியாளர் பாதிக்கப்பட்ட வர்கள் எங்கிருந்தாலும் அங்கு சென்று பணியாற்றுவதற்கான அனுமதி அவசி யம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அதிகாரியொருவர் புதிய நடை முறைகள் குறித்து அதிருப்தி வெளியிட் டுள்ளதுடன் வெளிநாடுகளிலிருந்து வந்து இலங்கையில் பணி புரிபவர்கள் தமது விஸாக்களைப் புதுப்பிப்பது எதிர்கா லத்தில் கடினமாக அமையலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி நெய்ல்பு ஹ்னே புதிய நடைமுறைகளை ஏற்று பணிபுரிவதற்கு இணங்கியுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு அறிவித் துள்ள புதிய நடைமுறைகளின்படி ஐக் கிய நாடுகளின் பணியாளர்கள் ஒரு பகுதியின் நான்கு வருடம் மாத்திரமே தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

அதேவேளை, நிபுணர்கள் மற்றும் ஆலோ சகர்களுக்கான விஸா ஒரு வருட காலத் திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அமைப்புகள் புதிய பதவிக ளுக்கு இலங்கையர்களையே நியமிக்க வேண்டும். வெளிநாட்டவர்களை நிய மிக்கும்போது அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும் புதிய பதவிகளை உருவாக்கும் போது இலங்கை அரசுடன் இது தொடர் பாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பணியாற்றும் மனிதா பிமான அமைப்புகளுக்கும் அவற்றின் பணிகளுடன் தொடர்புடைய அமைச்சு களிற்கும் இடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதே புதிய விதி முறை களின் நோக்கம் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சுடனான சந் திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய நாடு கள் அமைப்புகளின் தலைவர்களுக்குப் புதிய விதிமுறைகள் குறித்த சுற்று நிரு பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசிற்கும் ஐக்கிய நாடுகள் அமைப் பிற்கும் இடையிலான உறவுகளில் சர்ச்சை காணப்படும் நிலையிலேயே புதிய விதிமுறைகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

(அ-சி)

## ஆடி அமாவாசையை ஒட்டி சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஆடி அமாவாசையையொட்டி சாவ கச்சேரி சிவன் ஆலயத்தில் பிதிர்க் கடன் கிரியைகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பிதிர்க்கடன் கிரியைகள் இடம்பெறும்.

## மயில்வாகன சுவாமி குருபூசை

கரவெட்டி,ஜூலை 22

சந்நிதியான் ஆச்சிரமத்தில் முத்துக் குமாரு மயில்வாகன சுவாமியின் 24 ஆவது குருபூசைத் தினம் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்றையதினம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசை, அபிசேகம் போன்ற விசேட நிகழ்வுக ளும் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிர மத்தில் சுவாமிகளின் நினைவு நிகழ் வுகளும் இடம்பெறும்.

(202-70)

## ஞானச்சுடர் வெளியீடு

கரவெட்டி, ஜூலை 22

தொண்டைமா னாறு சந்நிதியான் ஆச்சிரம "ஞானச் சுடர்" சஞ்சிகை வெளியீடு எதிர் வரும் வெள்ளிக் கிழமை ஆச்சிர மத்தில் நடைபெற வுள்ளது.

வெளியீட்டு ரையை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகலிங்கமும் மதிப்புரையை யாழ். தேசியக் கல் வியியற்றுறை விரிவுரையாளர் திருமதி கௌரி [illegible]

(202-70)


நெஞ்சம் கனத்த நினைவலைகள்

மண் மகிழ 30 10 1944

கண் நெகிழ 22 07 2007



அமரர் சிந்தாத்துரை வேலாயுதம் [illegible]

ஆழ்துயரில் ஆறாத் துயரில்
ஆண்டொன்று சென்றதுவோ?
ஆறாது எம் மனம்
தாங்காது உம் பிரிவுத் துயரம்.

இல. 13, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் துயருறும்: மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஈழத் தமிழர் விவகாரத்தில் பாரதீய ஜனதாவின் ஈடுபாடு

இந்திய அரசியலில் இன்று முக்கியமான நாள்.

மத்தியில் இடதுசாரிகளின் ஆதரவை இழந்துள்ள - அல்லது தனது செயற்பாடு மூலம் அந்த ஆதரவை உதறித் தள்ளியுள்ள - காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு, ஏனைய உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மையைத் தக்கவைத்து, அதை நாடாளுமன்றத்தில் நிரூபித்து, ஆட்சியைத் தொடருமா? அல்லது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் அந்த அரசு கவிழுமா? அப்படி அரசு கவிழ்ந்தால் உடனடியாக மாற்று அரசு ஒன்று பதவி ஏற்குமா? அல்லது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உடன் அறிவிப்பு விடுக்கப்படுமா?

- இவை குறித்தெல்லாம் இன்று மாலைக்குள் முடிவு தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய கண்டத்தில் காங்கிரஸ் அரசு தப்பிப் பிழைத்தாலும், பல்வேறு உதிரிக் கட்சிகளின் தயவில் ஆட்சியைக் கொண்டிழுக்க வேண்டிய அந்த அரசுக்கு அதன் பின்னர் நிலைமை நித்திய கண்டம் என்ற கணக்குத்தான்.

அப்படி நித்திய கண்டத்தில் பூரண ஆயுளைக் கொண்டு இழுத்தாலும் அடுத்த ஏப்ரலுடன் தற்போதைய அரசின் ஆட்சிக் காலம் தானாகவே நிறைவு பெற்று விடும்.

எனவே, எப்படிப் பார்த்தாலும் விரைவில் இந்தியாவில் பொதுத் தேர்தல் என்பது தவிர்க்கப்பட முடியாத யதார்த்தமாகும்.

அடுத்த அரசு அமைப்பதற்கான - காற்று - அலை - பாரதீய ஜனதாக் கட்சிக்கு சார்பாக வீசுவதாக அவதானிகள் கூறுகின்றனர். கருத்துக் கணிப்புகள் வெளியிடும் ஆரூடமும் அதுதான்.

இந்தப் பின்னணியிலேயே, பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் இல. கணேசன், இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இப்போது தெரிவித்துள்ள கருத்துகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

தற்போதைய காங்கிரஸ் அரசுக்கு முன்னரும் ஐந்து ஆண்டுகள் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது இலங்கைப் பிரச்சினையில் எதுவுமே 'வெட்டிப் பிளக்காத' அந்தக் கட்சியின் அரசு, இன்னொரு தடவை ஆட்சிக்கு வந்து மட்டும் என்ன செய்து கிழித்து விடப் போகின்றது என்ற கேள்வி இக்கட்டத்தில் எழுவதும் தவிர்க்க முடியாததே.

ஆனால் அங்குதான் விடயமே இருக்கின்றது. கடந்த தடவை பாரதீய ஜனதா அரசு ஆட்சியில் இருந்தபோது இலங்கை விவகாரத்தை ஒட்டிய கொள்கை விடயங்களைத் தீர்மானிப்பதில் சோ. ராமசாமி போன்ற தரப்பினரின் செல்வாக்கு அதிகம் இருந்தது. அதனால் இலங்கை விவகாரத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவான - பரிவான - போக்கைக் கடைப்பிடிக்க முடியாத கட்டாயத்தில் அந்த அரசு அப்போது இருந்தது.

ஆனால் இப்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். அடுத்த ஆட்சியைத் தாங்களே அமைக்கப் போகின்ற உறுதிப்பாட்டுடன் இப்போதே அதற்கான பூர்வாங்கக் கட்டமைப்பு ஏற்பாடுகளைக் கவனித்து வரும் பாரதீய ஜனதாக் கட்சி, அயல் நாடான இலங்கையின் விவகாரத்தைக் கையாள்வதற்கான உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து இப்போதே செயற்படத் தொடங்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்தக் குழுவில் சோ.ராமசாமி போன்ற - ஈழத் தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தரப்புகளுக்கு எதிரான - ஆள்கள் இடம்பெறவே இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்கால பாரதீய ஜனதாக் கட்சி அரசில் இலங்கை விவகாரத்தைக் கையாளும் உயர்மட்டக் குழுவுக்கு, கொழும்புக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத் ஜா பொறுப்பாக இருக்கின்றார். இல. கணேசன் போன்ற - ஈழத் தமிழர்களுக்குப் பரிவான போக்குக் கொண்ட - பலருமே அக்குழுவில் இடம்பெறுகின்றார்கள் என்றும் தெரிகின்றது.

இக்குழு ஏற்கனவே கூடிப் பல தீர்மானங்களை எடுத்து விட்டது என்றும் -

இலங்கையில் ஈழத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டி உறுதிப்படுத்துவதற்காகத் தீர்க்கமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் -

இக்குழு தீர்மானித்து, உத்தேச நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தப் பின்னணியிலேயே "எதிர்காலத்தில் ஆட்சிப் பீடமேறும் பாரதீய ஜனதாக் கட்சி அரசு ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் இம்முறை காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும்" - என்று இல. கணேசன் உறுதிபடக் கூறும் கருத்தை நாம் நோக்க வேண்டியிருக்கின்றது.

இந்துத்துவப் பின்னணியைக் கொண்டுள்ள பாரதீய ஜனதாக் கட்சி, இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவது பௌத்த - சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பும், அடக்குமுறையுமே என்ற கோணத்தில் இலங்கை விவகாரத்தை இப்போது தெளிவான பார்வையுடன் நோக்க முற்பட்டிருப்பதாகவும் -

இவ்விடயங்களை இலங்கையில் இந்தியாவுக்கான தூதுவராகப் பணியாற்றி நேரடியாக - விவரமாக - விளக்கமாக - அறிந்து கொண்டவரான என்.என்.ஜாவே, இனி உத்தேச - புதிய - பாரதீய ஜனதா அரசில் இந்த அம்சத்தைக் கையாள்வார் என்பதால் இந்த பௌத்த மத ஆக்கிரமிப்பும் மேலாண்மையும் அத்தகைய விதத்தில் சரிவரக் கையாளப்படும் எனவும் -

புதுடில்லித் தரப்புகள் கருத்து வெளியிடுகின்றன.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை 'யார் குற்றியாவது அரிசியாக வேண்டும்' என்ற அவசரமும் அவசியமும்தான் அவர்களுக்கு. யாரது பங்களிப்போடாவது அவர்களுக்கு நியாயம் கிடைத்தால் - நீதி நிலைநாட்டப்பட்டால் - சரி!

## இந்திய மத்திய அரசு இன்று தப்பிப் பிழைக்குமா? ஆளும், எதிரணிக் கட்சிகள் மல்லுக் கட்டுகின்றன!

புதுடில்லி, ஜூலை 24

இந்திய காங்கிரஸ் அரசுக்கு வாழ்வா? சாவா எனத் தீர்மானிக்கப் போகும் நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெறுகிறது. இதற்கு கடைசி நிமிடம் எம்.பிக்களின் ஆதரவைத் திரட் டுவதில் காங்கிரஸ் கூட்டணியும் எதிர் அணியும் கடைசிக் கட்ட முயற்சியில் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்குகின்றன.

இதனால் வெல்லப் போவது யார் என்ற பரபரப்பு டில்லி அரசியலில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுதொடர்பாக டில்லி வட்டாரங்களிலிருந்து வெளியான தகவல்கள் வருமாறு:-

நம்பிக்கை வாக்கெடுப்பில் மத்திய அரசு வெற்றிபெற வேண்டுமானால் குறைந்த பட்சம் 271 உறுப்பினர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பை ஆதரித்து வாக்களிக்கவேண்டும்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ், ராஷ்டீரிய ஜனதாதளம், தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் உள்ளன. இந்தக் கட்சிகளின் எம்.பிக்கள் நம்பிக்கை வாக்கெடுப்பை ஆதரித்து வாக்களிப்பர்.

இதில் காங்கிரஸ் கட்சிக்கு 153 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் அரியானா மாநில எம்.பிக்கள் 2 ஃபர் உட்பட 4 பேர் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு எதிராக வாக்களிக்கப் போகின்றனர் என அறிவித்துள்ளனர்.

ராஷ்ட்ரீய ஜனதாதளம் கட்சியின் 24 எம்.பிக்களும், தி.மு.கவின் 16 எம்.பிக்களும், சரத்பவரின் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியின் 11 எம்.பிக்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் 6 எம்.பிக்களும் நம்பிக்கை வாக்கெடுப்பை ஆதரித்து வாக்களிப்பார்கள்.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பிக் கள் 5 பேரும் நம்பிக்கை தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்று அக்கட்சியின் தலைவர் சிபு சோரன் அறிவித்துள்ளார்.

இதேபோல், ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி எம்.பிக்கள் 4பேரும், தேசிய மாநாட்டுக் கட்சி எம்.பிக்கள் 2 பேரும், போட்டி ம.தி.மு.க. உறுப்பி னர்கள் 2 பேரும் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்போம் என அறிவித்துள்ளனர். தலா ஒரு உறுப்பினரைக் கொண்ட முஸ்லிம் லீக் (கேரளம்), இந்தியக் குடியரசுக் கட்சி (அத்வாலே), அகில இந்திய மஜ்லிஸ், கேரள காங்கிரஸ், காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி, சிக்கிம் ஜனநாயக முன்னணி, மிசோரம் தேசிய முன்னணி, தேசிய லோக்தந்திரிக் ஆகிய கட்சிகளும், மேலும் 3 சுயேச்சைகளும் நம்பிக்கை வாக்கெடுப்பை ஆதரித்து வாக்குப் போடுவார்கள்.

முலாயம் சிங்கின் சமாஜ்வாடிக் கட்சிக்கு 39 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களில் 4 பேர் எதிர் அணியின் பக்கம் சேர்ந்துவிட்டனர். இதனால் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவாக சமாஜ்வாடியின் 35 வாக்குகள் மட்டுமே கிடைக்கும். போடோலேண்ட் மக்கள் முன்னணி கட்சியின் ஒரே எம்.பியான சான்சூமா குங்குர் பிஸ்வ முதியாரி அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதாக நேற்றுமுன்தினம் அறிவித்தார்.எனவே,அதாவது ஞாயிறன்று இருந்த நிலைவரப்படி காங்கிரஸ் அணியின் பலம் 269ஆக உள்ளது.

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அந்தக் கட்சியுடன் சிவசேனா, பிஜூ ஜனதா தளம் உள்ளிட்ட 6 கட்சிகள் இடம்பெற்றிருக்கின்றன.பாரதீய ஜனதாவுக்கு 139 எம்.பிக்கள் உள்ளனர்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீகண்டப்பா, மஞ்சுநாத் கன்னூர் ஆகிய 2 எம்.பிக்கள் நம்பிக்கை வாக்கெடுப்பைப் புறக்கணிக்கக் கூடும் என்று தெரிகிறது.

## 4 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் மொன்றியல் பொங்கு தமிழில் திரண்டனர்



கனடா கியூபெக் தமிழ்ச் சமூகத்தினால் கடந்த 19 ஆம் திகதி நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் 4 ஆயிரத்துக்கும் அதிக மான தமிழர்கள் பேரெழுச்சியுடன் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு மொன்றியல் நகரில் உள்ளபார்க் எக்சன்சன் பகுதியில் அமைந்திருக்கும் ஹவாட் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்கி யது. நிகழ்வின் பொதுச் சுடரினை ஓயாத அலைகள் -01 இல் வீரகாவியமான கப்டன் தமிழேந்தியின் சகோதரி அசந்தினி ஜெயகாந் ஏற்றினார்.

தொடர்ந்து கனடா தேசியக் கொடி, கியூபெக் மாநிலக்கொடி, தமிழீழ தேசியக்கொடி ஆகியன ஏற்றப்பட் டன.

கனடா தேசியக்கொடியை வல்வை மக்கள் சங்கம் சார்பாக நடராஜா பிரிதிவிராஜ், கியூபெக் மாநிலக் கொடியை கியூபெக் தமிழர் மூத்தோர் இணையத் தலைவர் முத்துக்குமாரு சிவானந்தம், தமிழீழத் தேசியக்கொடியை மாவீரன் 2 ஆம் ஆம் லெப். முரளியின் சகோதரர் வேலுச்சாமி குலேந்திரசிகாமணி ஏற்றினார். தொடர்ந்து , அகவணக்கம் நடை பெற்றது. இதனைத் தொடர்ந்து, அரங்க நிகழ்ச்சிகள் தொடங்கின.

மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரக் கச்சேரி, எழுச்சி நடனங்கள், எழுச்சிப் பாடல்கள், மற்றும் சிறப்புரைகள் ஆகியன இடம்பெற்றன.

ஆதிபராசக்தி நாட்டியக் கலைக்கூடம், சோவே சபனல் மக்கள், மொன்றியல் கலைப் பிரியர்கள், அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி, மொன்றியல் வல்வை மக்கள் ஆகியோர் எழுச்சி நடனங்களை வழங்கியிருந்தனர். மொன்றியல் வான்மதி நுண்கலைக்கூட ஆசிரியையும், குயில் இசை மன்ற ஆசிரியையும் இணைந்து எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரும் கவிஞருமான புதுவை இரத்தினதுரை, சமர்-வரலாறு ஆய்வு மையப் பொறுப்பாளர் யோகி, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே. பாலகுமாரன் ஆகியோரின் உரைகள் ஒலிக்கப்பட்டன.

பார்க் எக்சன்சன் பகுதி, மொன்றியல் மாநகர உறுப்பினர் மேரி டிடிறோஸ் பேசும்போது, நீண்டகாலமாக தமிழ் மக்களோடு நட்பைபேணி வருகின்றேன். இன்று தமிழர்கள் ஒன்றுபட்டு நடத்தும் இந்நிகழ்வை பார்க்கும்போது மகிழ்வடைகிறேன் என்று கூறினார்.

அரசியல் ஆய்வாளர் எஸ். திருச்செல்வம் பேசும்போது, தாயக உணர்வு-அனைத்துலகத்தின் நிலைப்பாடு-தேசியத் தலைவரின் மதிநுட்பமான நகர்வு போன்ற விடயங்களை கருத்தாழத்துடன் தெரிவித்திருந்தார்.

கியூபெக் தமிழ் இளை யோரினால், தமிழ் மக்கள் சிறிலங்கா அரசினால் எவ்வாறு அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று காலத் தரவுகளோடு ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் உரையாற்றினர். வினோத் ஆங்கிலத்தில் வழங்க தொடர்ந்து லிகாந் பிரெஞ்சில் மொழிபெயர்த்தார்.

கியூபெக் தமிழர்களின் பொங்கு தமிழ் முழக்கமும், பிரகடனமும் வாசிக்கப்பட்டது. கியூபெக் தமிழர்களின் பொங்கு தமிழ் பாடலுக்கு மக்கள் எழுச்சி பொங்க நடனமாடினர். ரொறன்ரோவிலிருந்து வருகை தந்த வானம்பாடிகளின் எழுச்சி இசை விருந்தோடு மக்களும் இணைந்து உணர்வு பொங்கு ஆடினர். இறுதியாக கொடிகள் இறக்கும் வைபவத்தோடு நிகழ்வு நிறைவடைந்தது.

நிகழ்வினை விடுதலைப் புலிகளின் அதிகாரவழி வானொலியான புலிகளின குரலும், மொன்றியல் தமிழ் இராகம்(MTR)அனைத்துலக தமிழ்வானொலி(ITR)ஆகிய வானொலிகளும், தமிழ் வண்(Tamil One) தொலைக்காட்சியும் நேரடி ஒலிபரப்பும்- ஒளிபரப்புச் செய்திருந்தன.

### நாளை

| | |
|---|---|
| ஆடி 08 | 23.07.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப. 01.56 வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி |
| சுபநேரம் : | 04.32 - 06.02 |
| ராகுகாலம் : | 12.02 - 01.32 |

## வலி.மேற்கில் இன்று கருத்தரங்கும், மரம்நடுகையும்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டிலான உள்ளூராட்சி வார நிகழ்வில் இன்று கருத்தரங்கு, மரம் நடுகை என்பன இடம்பெறவுள்ளன.

"தனிநபர் சுகாதாரமும் போசாக்கும்" என்னும் தலைப்பில் வலி. மேற்கு பிரதேச சபை உத்தியோகத் தர்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், சந்தைகள், பொது இடங்கள், மயானங்கள், சன சமூக நிலையங்கள், முன்பள்ளிகள் ஆகிய இடங்களில் மரம் நடுகை விழாக்களும் இடம்பெறும். (1)

## இன்றைய ஆட்டம்

வலி வடக்கு, ஜூலை 22

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளின் 17வயது கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண சென்ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதுகின்றன. (1-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி வலய மாணவர்களுக்கிடையேயான கணித, விஞ்ஞான விநாடி வினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலயமட்ட தமிழ், ஆங்கில மொழி மூலமான கணித, விஞ்ஞான பாட விநாடி வினாப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும், மீசாலை வீரசிங்கம் ம.வியைச் சேர்ந்த 17 மாணவர்களும் அதிக புள்ளிகளைப் பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர்.

**தமிழ் மொழி மூலம்**
**கணிதபாடப் போட்டிகள்**

*தரம் - 6:* சி. கார்த்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி. மதுரிகன் (உசன் இராமநாதன் ம.வி.), ப. சுதர்சன் (மட்டுவில் கமலாசனி வித்தி.)

*தரம் - 7:* ஆ. கிரிசாம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா. ஆதவன்(குடமியன் அ.த.க. பாடசாலை), சி. வின்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 8:* க. கேதாரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச. செந்தாளன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மோ. தனுஷ்ராஜ் (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

*தரம் - 9:* கி.. கிறிஸ்ரிகா வேளயினி (உசன் இராமநாதன் ம.வி.), க. சிவதாஸ் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), பா. தர்சனா (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

*தரம் -10:* கு. சரண்யா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ப. சாகித்தியன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பொ.வாகீசன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.)

*தரம் - 11:* சி.இராகவன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), இ. உமைப்பிரியை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.நிஷாந்தி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**விஞ்ஞானப் போட்டிகள்**

*தரம் - 6:* சி.மதுரிகன்(உசன் இராமநாதன் ம.வி.), கா. கேதாரன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), பே. தர்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 7:* ஆ. கிருஷாந் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சு. விஜிதன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), க. விமோசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 8:* சி. சுஜீவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி. ரூபகானன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), த. செந்தாளன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 9:* செ. வைஸ்ணவன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), ச. அகிம்சா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மு. சிந்துஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 10:* பொ. தனுசாந் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), வ. காவேரி (கச்சாய் அ.த.க. பாடசாலை), செ. லக்ஸ்மியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 11:* சி.நிஷாந்தி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சு. தர்மிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ. உமைப்பிரியை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**ஆங்கில மொழி மூலம்**
**கணிதபாடப் போட்டிகள்**

*தரம் - 6:* சி.கிருஷிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ. ஜெனீசன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), எம்.ஸ்ரீபன்ராஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 7:* ரி.பிரகாஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ஜே. சந்திரோதயன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 8 :* எஸ். ரஜீதன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.), ஜே. கம்சனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), எஸ். சித்திராங்கி (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

*தரம் - 9:* எஸ். கௌசிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பீ. தேனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச. சசீசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் - 10:* ரி. அனோஜன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ம. நிவேதிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), என்.சோபிதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**விஞ்ஞான பாடப் போட்டிகள்**

*தரம் - 6:* சி.கிருஷிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ. ஜெனீசன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ப. கஜீதன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

*தரம் -7:* இ. சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ப. துவிதா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), சி. ஆர்த்தியன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம் -8:* ஆர். தினுஷா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜே. கம்சனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த. தர்சிகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

*தரம் -9:* வே. சேயோன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆ. சிந்துஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச. சஜிசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

*தரம் -10:* ம. நிவேதிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நா. தர்சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ம. கேதாரணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) (207)

# கலைப்பீடத்தின் மீள் பரீட்சைகள்

நல்லூர், ஜூலை26

கலைப்பீட, மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று பட்டக் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்யத் தவறிய மாணவர்களிற்கான விசேட மீள் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு அடுத்தமாதம் 8 ஆம் திகதியிலிருந்து பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

நான்காம் வருட மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் முதலாம் வாரத்தில் நடைபெறும்.

மாணவர்கள் இந்த அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு பரீட்சைகளுக்குத் தோற்றலாம் என்றும் மேலதிக விவரங்களை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்றும் பீடாதிபதி தெரிவித்தார்.

# நலன்புரி சங்க கூட்டமும் பராட்டு விழாவும்

ஊர்காவற்றுறை, ஜூலை22

ஊர்காவற்றுறை பிரதேசசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சு.சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொறுப்பு உத்தியோகத்தர் ந. சச்சிதானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரதேச சபையில் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற வி. ஆர். தியாகராஜா, இடமாற்றலாகி சென்ற நா. மோகனகரன், எஸ்.சுரேஸ்குமார், திருமதி எஸ்.சுகுமார், சி. தயாளினி ஆகியோர் அன்றைய தினம் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (202-127)

# சமய சந்நிதிகளில்

குருநகர், ஜூலை22

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு திருச்செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்று வரும் நவநாள் ஆராதனைகளில் திருப்பலியும் நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நற்கருணைநாதர் வழிபாடு நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை திருவிழாத் திருப்பலிகளில் காலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து காலை 7 மணிக்கு இரண்டாவது திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெறும். (203-51)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை22

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திரு விழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10.33 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 1 0 நாள்கள் நடைபெறவுள்ளது.அடுத்தமாதம் 3ஆம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை22

சாவகச்சேரி வாரிவனநாதசிவன் ஆலயத்திலுள்ள அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை22

சாவகச்சேரி, கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும், ஓகஸ்ட் 3ஆம் திகதி திருநாட்பாடல் பரிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (203-207)

* * *

வடமராட்சி, ஜூலை22

பருத்தித்துறை, புலோலி பசுபதீஸ்வரர் ஆலய அம்மன் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 4 ஆம் திகதி ஆடிப்பூரத்தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-236)

* * *

வடமராட்சி, ஜூலை22

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெறுவதுடன் அலங்கார உற்சவம் நிறைவடையும். (202-236)

# நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கு டென்மார்க் நிறுவன உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை22

நெடுந்தீவில் வசிக்கும் சமுர்த்தி திட்டப் பயனாளிகளுக்கு டனிஸ் அகதிகளுக்கான பேரவை உலர் உணவுப் பொருள்களை வழங்கி உதவியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் சோயா, மீன்ரின், கருவாடு, மரக்கறி எண்ணெய், கடலை, தேங்காய்ப்பால்மா, தேயிலை, பிஸ்கற், புளி, சீரகம், பெருஞ்சீரகம், மிளகாய்த்தூள், மல்லி, உப்பு, மிளகு என்பன 4 வாரங்களுக்கு தேவையான அளவுக்கு வழங்கப்பட்டன.

இந்த உபஉணவு விநியோகத்தில் நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த 466 பயனாளிகள் பயன்பெற்றனர் எனவும்-

உப உணவுப் பொருள்களுக்கான விநியோக நடவடிக்கைக்கு, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஷும், இலங்கைக் கடற்படையினரும் ஒத்துழைப்பினைவழங்கியிருந்தனர் என்றும் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை22

இலங்கை போக்குவரத்துச்சபையில் நிலவும் பிரதிப் பொது முகாமையாளர், பிரதம வழங்கல் முகாமையாளர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதிப் பொது முகாமையாளர் பதவிக்கு வியாபார நிர்வாகம், மனிதவள முகாமை ஆகிய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மனிதவள முகாமை நிறுவகத்தின் பூரண உறுப்புரிமை அல்லது சட்டத்தரணி பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பிரதம வழங்கல் முகாமையாளர் பதவிக்கு வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், வணிகம் ஆகியவற்றில் பல்கலைக்கழகப் பட்டம் வழங்கல், பொருள்கள், முகாமைத்துவ நிறுவகத்தின் கொள்வனவு, பொருள் முகாமைத்துவத்தில் டிப்ளோமா, வழங்கல் பொருள்கள் முகாமைத்துவ நிறுவகத்தில் முழு உறுப்புரிமை பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் அத்தாட்சிப்படுத்திய விவரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், இலங்கை போக்குவரத்துச் சபை, இல.200, கிருல வீதி, கொழும்பு 05' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# புதியவர்களின் நடமாட்டம் அறிந்தால் படையினருக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை22

இரவு நேரங்களில் புதியவர்கள்-அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறு படையினர் குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

பொதுமக்களின் உடைமைகளைத் திருடர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல்களை படையினர் விடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவர் ஒட்டிகள் மற்றும் ஒலிபெருக்கிகள் மூலம் இந்த அறிவுறுத்தல்கள் அறிவிக்கப்படுகின்றன.

இரவு நேரங்களில் வெளியிடத்தவர்கள் எவரையும் உங்கள் வீடுகளில் தங்க அனுமதிக்க வேண்டாம், சந்தேகத்துக்கு இடமானோர் இரவு நேரங்களில் உங்கள் வீடுகளுக்கு வந்தால் அவர்களை வரவேற்க வேண்டாம். புதியவர்களின் நடமாட்டம் உங்கள் பிரதேசத்தில் காணப்பட்டால் உடனடியாக அதனை அறியத் தாருங்கள் என்றும் படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

சுன்னாகம்அதனை அண்டிய ஊர்மக்கள் 060 221 3159, 060 221 2358 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் உடுவிலும் அதனை அண்டிய ஊர்மக்களும் 060 221 2204 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்-

சுதுமலை, மானிப்பாய், நவாலி ஆகிய பிரதேச மக்கள் 060 221 6095, 060 221 4620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொண்டு இரவில் புதியவர்களின் நடமாட்டத்தை அறியத் தரலாம் என்றும் படையினர் தெரிவித்துள்ளனர். (202-25)

# வெளிநாட்டு சேவையாளருக்கு பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூலை22

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம், 2 ஆம் வினைத்திறன் தடைகாண் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கொழும்பிலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலும் நடைபெறவுள்ளது.

மேலதிக விவரங்களை 18.07.2008 ஆம் திகதிய அரசவர்த்தமானியில் பார்வையிடலாம். (202)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெஸ்ட்டில் அசத்துவோம் - கார்த்திக்

கொழும்பு, ஜூலை 22

''ஒரு தொடரின் தொடக்கத்தில் வீரர்கள் தடுமாறுவது வழக்கமான ஒன்றுதான். இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயல்படுவார்கள்.''

- இவ்வாறு இந்திய வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இந்திய அணி தொடரின் தொடக்கத்தில் மோசமாக விளையாடுவது வழக்கமான ஒன்றுதான். டெஸ்ட் தொடரில் அனுபவ வீரர்கள் தங்களது அனுபவத்தை வெளிப்படுத்துவார்கள். அதிக ஓட்டங்களை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. டோனி இல்லாதநிலையில் அரைச்சதம் கடந்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. சச்சின் கொடுத்த அறிவுரைகள் துடுப்பாட்டத்திற்குக் கைகொடுத்தது. தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினால் ஒரு நாள் அணியிலும் இடம் கிடைக்கும். - இவ்வாறு தினேஷ் கார்த்திக் தெரிவித்தார்.

## இந்தியா - இலங்கைத் தொடர்: சர்வதேச கிரிக்கெட் சபை ஆய்வு

டுபாய், ஜூலை 22

இலங்கை, இந்திய அணிகளிடையே ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரில் அறிமுகப் படுத்தப்படவுள்ள நடுவரின் தீர்ப்புக் குறித்த புதிய விதி தொடர்பில் ஐ.சி.சி. நேரில் ஆய்வு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை- இந்தியக் கிரிக்கெட் அணிகளிடையே நாளை 23 ஆம் திகதி கொழும்பில் தொடங்கும் முதலாவது டெஸ்டில் புதிய முறை ஒன்று அறிமுகமாகிறது. இதன்படி நடுவரின் தீர்ப்பில் சந்தேகம் ஏற்பட்டால், 3 ஆவது நடுவரிடம் மேன்முறையீடு செய்யலாம். அவர் தொழில்நுட்பம் உதவியுடன் ஆராய்ந்து தனது தீர்ப்பை அளிப்பார்.

ஓர் இன்னிங்ஸில் ஓர் அணி 3 முறை இவ்வாறு மேன்முறையீடு செய்யலாம். இந்தப் பரிசோதனை முறை எவ்வாறு செயற்படுகிறது, எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கிறது என்பது குறித்து ஐ.சி.சியின் பொதுச் செயலாளர் டேவ் ரிச்சர்ட்சன் ஆய்வு செய்ய இருக்கிறார். முதல் டெஸ்ட்டுக்காக மைதானத்தை சுற்றிலும் 22 கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# லீட்ஸ் டெஸ்ட்; தென்னாபிரிக்கா ஆதிக்கம்

### --- சதம் அடித்து அசத்தினார் டீ வில்லியர்ஸ் ---

லீட்ஸ், ஜூலை 22

டீ வில்லியர்ஸின் சதம் பக்கபலமாக அமைய, இங்கிலாந்துக்கு எதிராக லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஆதிக்கம் செலுத்திவருகின்றது.

தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்ஸில் 522 ஓட்டங்களைக் குவித்து 319 ஓட்டங்களால் முன்னிலைபெற்றது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் 3ஆம் நாள் ஆட்டம் முடிவடையும் போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து அணி இன்னும் 269 ஓட்டங்களைப் பெறவேண்டும்.

இரண்டாவது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை முதல் லீட்ஸில் நடைபெற்றுவருகிறது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுமாறு கேட்கப்பட்டிருந்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 203 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதையடுத்துக் களமிறங்கிய தென்னாபிரிக்கா இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிரின்ஸ் 134 ஓட்டங்களுடனும், டீ வில்லியர்ஸ் 70 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. கூடுதலாக 15 ஓட்டங்களை எடுத்தநிலையில் பிரின்ஸ்(149) பற்றிஸனின் வேகத்தில் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டீ வில்லியர்ஸ் டெஸ்ட் அரங்கில் 6ஆவது சதம் கடந்து அசத்தினார்.

நிதானமாக விளையாடிய மார்க் பௌச்சர் 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அன்டர்ஸனின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். அடுத்து வந்த மோர்கீல் ஓட்டமெதுவும் பெறாமல் பனிஷரின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

மறுமுனையில் அபார ஆட்டத்தைத் தொடர்ந்த டீ வில்லியர்ஸ் 174 ஓட்டங்களை விளாசி ஸ்ருவேட் பிராட்டின் பந்துவீச்சில் பிளின்ரொப்பிடம் பிடிகொடுத்து வெளியேறினார். 381 பந்துகளை எதிர்கொண்ட அவர், 19 பவுண்டரிகளையும் தனது ஓட்டஎண்ணிக்கையில் சேர்த்திருந்தார். இறுதியில் போல் ஹரீஸ் 24 ஓட்டங்களுடனும், மக்காயா நிற்னி ஓர் ஓட்டத்துடனும் பனிஷரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் தென்னாபிரிக்கா அணி 176.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றது. டேல் ஸ்ரைன் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் அன்டர்ஸன், பனிஷர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பற்றிஸன் 2 விக்கெட்டுகளையும், பிளின்ரொப் மற்றும் ஸ்ருவேட் பிராட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

319 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணிதனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. நிற்னியில் வேகத்தில் ஆரம்ப வீரரான அன்ட்ரூ ஸ்ரோரஸ் ஓட்டமெதுவும் பெறாமல் பௌச்சரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். சிறிது நேரம் பொறுமையாக ஆடிய அணித் தலைவர் மைக்கல் வோகன் 21 ஓட்டங்களுடன் நிற்னியிடம் சரணடைந்தார்.




மூன்றாம் நாள் ஆட்டநேரம் முடிவடையும்போது இங்கிலாந்து அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அலஸ்ரியர் குக் 23 ஓட்டங்களுடனும், அன்டர்ஸன் ஓட்டமெதுவும் பெறாமலும் களத்தில் உள்ளனர்.

போட்டி முடிவடைய இன்னும் இரண்டு நாள்கள் உள்ளமையால் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெறுவதற்கு கூடுதலான வாய்ப்புகள் உள்ளன. இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டால் தோல்வியைத் தவிர்த்துக்கொள்ளலாம். நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

## முரளிதரன் அபாயகரமானவர் - கங்குலி

கொழும்பு, ஜூலை 22

அஜந்த மெண்டிஸை விட முரளிதரனே அபாயகரமானவர் என்று சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் புதிய சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் சிறந்த பந்து வீச்சாளர் என்பதில் சந்தேகமில்லை. ஆசியக் கிண்ணப் போட்டியில் அவரது பந்து வீச்சு உண்மையிலேயே அபாரமாக இருந்தது. அவர் மற்றைய சுழற் பந்துவீச்சாளர்களிடம் இருந்து வேறுபட்டவராக இருக்கிறார். ஆனால் அவருக்கு எதிராக தொடர்ந்து ஆடும் போது அவரது பந்துவீச்சை சமாளிப்பது எப்படி என்பதை வீரர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டில் நிறைய நேரம் கிடைக்கிறது. என்னைப் பொறுத்தவரை மெண்டிஸை விட முரளிதரனே இன்னும் அபாயகரமான பந்துவீச்சாளராக இருக்கிறார். - என்றார் கங்குலி.

# பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையில் சிம்பாப்வே ஜனாதிபதி - எதிர்க்கட்சி கைச்சாத்து



ஹராரி, ஜூலை 22

சிம்பாப்வேயில் தலைதூக்கிவரும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு அந்நாட்டு ஜனாதிபதியும், எதிர்க்கட்சியினரும் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட இணக்கம் தெரிவித்துள்ளனர். உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்படவிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

''சிம்பாப்வேயில் தலைதூக்கி வரும் அரசியல் நெருக்கடிகளுக்கு, எதிர்க்கட்சியுடன் இணைந்து தீர்வு காண அந்நாட்டின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதி முகாபேயின் அரசு முன்வந்துள்ளது. இதற்கான விரிவான பேச்சுகளில் இரு தரப்புகளும் ஈடுபடும்'' என ஐ.நா. தூதுவர் ஹெய்லி மென் கிரியோஸ் தெரிவித்தார். இவர் ஐ.நா.வுக்கான சிம்பாப்வேயின் தூதுவராவார்.

''பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையொன்றில், ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயும், எதிரணியான ஜனநாயக மாற்றத்துக்கான கட்சியின் தலைவர் மோர்கன் ஸ்வான்கிராயும் கைச்சாத்திடவுள்ளனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

"பேச்சுகளில் ஈடுபடுவதற்கு முன்னர் அவை தொடர்பான புரிந்துணர்வு வரைவுத் திட்டமொன்று அவசியம் என்ற நிபந்தனை எழுந்தது. இதற்கு இருசாராரும் உடன்பட்டுள்ளனர். புரிந்துணர்வுத் திட்டம் கைச்சாத்தானதும், இரு வரும் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடுவர்'' - என்றும் அவர் விளக்கினார்.

அதேவேளை,''ஜனாதிபதி முகாபேயுடன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு, ஸ்வான்கிராயின் கட்சி பல நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. எதிரணிக்கு எதிரான வன்முறைகள் முற்றும் முழுதாகக் கைவிடப்பட வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளும் இவற்றில் அடங்கும்" என, எதிர்க்கட்சியின் பேச்சாளர் கோர்க் சிபொட்ஷிவி, பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

"எங்கள் சமூகம் ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும். அதற்கு ஏதுவான அரசே எமக்குத் தேவை. சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தலையே நாங்கள் விரும்புகின்றோம். உத்தேச பேச்சுகளில் சாதகமான நிலைப்பாடு தோன்றலாம் என எதிர்பார்க்கின்றோம். இரு சாராருக்குமிடையிலான உடன்படிக்கை இவ்வாரத்தில் கைச்சாத்திடப்பட்டு விடலாம்'' - என்றும் நம்பிக்கை அவர் தெரிவித்தார்.

## ஆப்கான் போர் குறித்து புஷ் கவனம் செலுத்தவில்லை!

### ஒபாமா குற்றச்சாட்டு

காபூல், ஜூலை 22

ஆப்கானிஸ்தானில் நடந்துவரும் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் புஷ் நிர்வாகம் போதிய கவனம் செலுத்தவில்லை என்று பராக் ஒபாமா குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

ஆப்கானுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஒபாமா, அங்கு நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியவை வருமாறு:

''ஆப்கானிஸ்தானில் அமெரிக்க வீரர்கள் செய்து வரும் வீரதீரச் செயல்களுக்காக நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். ஆப்கானிஸ்தான் போர் மீது புஷ் நிர்வாகம் போதிய கவனம் செலுத்தவில்லை. ஈராக் போரில்தான் புஷ் அரசு மிகுந்த கவனம்செலுத்தி வருகிறது.

''அதன் கவனம் ஈராக்கிலிருந்து ஆப்கானிஸ்தான் போர் மீது திரும்ப வேண்டும். ஈராக்கிலிருந்து அமெரிக்கத் துருப்புகளை 16 மாதங்களில் திரும்பப்பெற வேண்டும். ஆப்கானிஸ்தானுக்கு மேலும் 2 பிரிகேட்டுகளை அனுப்ப வேண்டும். அதாவது 7000 துருப்புகளை அனுப்ப வேண்டும். '' - என்று ஒபாமா கூறினார்.

## பராக் ஒபாமா ஈராக் சென்றார்

பக்தாத், ஜூலை 22

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பராக் ஒபாமா, தமது ஆப்கானிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுத் திங்கட்கிழமை ஈராக் வந்தடைந்தார்.

இவர் சிரேஷ்ட ஈராக்கிய அதிகாரிகள், இராணுவத் தலைவர்கள், அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஆகியோரைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இரு சீன பஸ்களில் வெடி விபத்து இருவர் உயிரிழப்பு; 14 பேர் காயம்

பீஜிங், ஜூலை 22

தென் - மேற்கு சீன நகரான குன்மிங்கில், நேற்றுத் திங்கட் கிழமை, இரு பஸ்களில் இடம்பெற்ற வெடிவிபத்துகளில், இருவர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனர். மக்கள் நடமாட்டம் மிகுந்த காலை வேளையில், சொற்ப நேர இடைவெளியில் இவ்வெடி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என அரச ஊடகமான சிங்குவா குறிப்பிட்டது.

இவ்வெடி விபத்தால் ஒரு பஸ்ஸுக்குள் துவாரம் ஒன்று ஏற்பட்டிருந்தது. ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கி வீதியில் சிதறிக்கிடந்தன. இச் சம்பவம் அரச தொலைக் காட்சியில் காட்டப்பட்டது.

இவ்விபத்துக்கள் குண்டுகள் வெடிப்பால் ஏற்பட்டவையா அல்லது இதர வெடிப் பொருட்களால் ஏற்பட்டனவா? என்ற விபரம் உடனடியாக வெளியாகவில்லை. எனினும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தேர்தலில் வெற்றிபெற்ற ராம் பரன் யாதவ் நேபாளத்தின் முதல் ஜனாதிபதியாகின்றார்

காத்மண்டு, ஜூலை 22

நேபாளத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மாவோயிஸ்ட்டுகள் சார்பில் போட்டியிட்ட ராமராஜ பிரசாத் சிங் தோல்வியடைந்துள்ளார் என அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. நேபாள காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ராம் பரன் யாதவ் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார் என்றும் நாட்டின் முதல் ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்பார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.



கடந்த சனிக்கிழமை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இரு வேட்பாளர்களுக்கும் பெரும்பான்மை கிடையாமையால் நேற்று மீள் வாக்குப் பதிவு நடைபெற்றது. 590 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர்.

நேபாள காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ராம் பரன் யாதவ் 308 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட மாவோயிஸ்ட் வேட்பாளர் ராமராஜ பிரசாத் சிங் 282 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியுற்றார்.

240 வருடகால மன்னராட்சி அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நேபாளத்தில் நடத்தப்பட்ட முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் காட்டுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டவர் பொலிஸாரின் சூட்டுக்குப் பலி!

## புறக்கோட்டை சோனகத்தெருவில் சம்பவம்

கொழும்பு,ஜூலை22

கொழும்பு புறக்கோட்டை புதியசோன கத்தெருப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேக நபர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சோனகத்தெருப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சிலவற்றை மீட்பதற்காக சந்தேக நபரைப் பொலிஸார் கூட்டிச்சென்றனர். அப்போது சந்தேக நபர் தன்னிடம் மறைத்துவைத்திருந்த பிஸ்டலை எடுத்து உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி சுட்டபோது பொலிஸார் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

காயமடைந்த சந்தேக நபர் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

இவர் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தார் -

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் ஆயுதங்கள் மறைத்துவைத்திருந்த இடத்திற்கு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவரைக் கூட்டிச் சென்றனர் என்றும் -

அப்போது அவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இடது கையில் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1974 இலேயே கச்சதீவு இலங்கையினுடையது என இந்தியா அங்கீகரித்துவிட்டது.

இதன் காரணமாக இது குறித்து மேலும் பேசத் தேவையில்லை -என்று நான் கருதுகிறேன்-என்றும் என்றும் பாலித கொஹண தெரிவித்துள்ளார்.

'சார்க்' மாநாட்டிற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகையில் தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் கச்சதீவு குறித்து புதிய சர்ச்சை உருவாகி வருவது குறித்து பாலித கொஹண கவலை வெளியிட்டார்.

"இந்திய மீனவர்கள் இருவரது கொலைக்கு இலங்கைக் கடற்படை காரணமல்ல. கடந்த காலங்களிலும் விடுதலைப்புலிகள் இந்திய மீனவர்களைப் படுகொலை செய்துவிட்டு இலங்கைக் கடற்படையினர் மீது பழியைப் போட்டுள்ளனர். அரசு மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகள் மூலம் இந்திய மீனவர்கள் இருவரது படுகொலைக்கு இலங்கைக் கடற்படை காரணமல்ல எனத் தெரியவந்துள்ளது.'' என்று அவர் கூறினார். (அ-சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரால் ஒப்படைக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்நத கணபதி ஞானசீலன் (வயது - 29), தர்மபுரம் 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் தமிழ்வாணன் (வயது - 29), கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த நடராஜா சிறிசாய்தரன் (வயது - 22) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களுடன் காணாமல்போனார் என்று கூறப்படும் வெள்ளாங்குளம் கணேசபுரத்தைச் சேர்ந்த மரிசாம்பிள்ளை ஈழவேந்தன் (வயது - 25) என்பவர் தொடர்பிலான தகவல்கள் எவையும் இது வரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# 'சி.டி.எம்.ஏ' பொலிஸ் அனுமதி பெறுவதில் பாவனையாளர் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் சி.டி.எம்.ஏ தொலைபேசிகளை வைத்திருப்போருக்கு பொலீஸ் நிலையங்களில் பொலீஸ் அனுமதி (''கிளியரன்ஸ்'') வழங்கப்படுகின்றது.

சி.டி.எம்.ஏ தொலைபேசி வைத்திருப்போர் பொலீஸ் ''கிளியரன்ஸ்' பெறவேண்டும் என்று ''ரெலிக்கொம்'' வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அதனை அடுத்து சி.டி.எம்.ஏ தொலைபேசிப் பாவனையாளர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்துகொண்டு பிரதேச செயலகங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் பெரும் எண்ணிக்கையில் செல்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் பொலிஸார் இந்த 'கிளியரன்ஸ்' வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஒரு சில பொலிஸ் நிலையங்களுக்கு இந்த அனுமதியைப் பெறுவதற்குச் சென்ற சி.டி.எம்.ஏ பாவனையாளர்களிடம் பொலிஸார் இது தொடர்பான அறிவுறுத்தல் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவித்தமையால் தாம் ஏமாற்றத்துடன் திரும்பியதாகக் கூறினர். (அ-50-86)

## கெருடாவிலில் மர்மப்பொதி வெடித்ததில் குசினிசேதம்

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் வீடு ஒன்றில் நேற்று மர்மப்பொதி ஒன்று வெடித்தது.

அந்த வீட்டின் குசினிப் பகுதியில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. குசினி முற்றாகச் சேதமடைந்தது.

குறிப்பிட்ட வீட்டில் வசித்துவரும் வயோதிபர் வெளியே சென்று வீடு திரும்புவதற்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (அ-1-207)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி பிரேரணைக்கு எதிரான தமது கருத்தை முன்வைத்தார்.

தொடர்ந்து ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் உரையாற்றினர்.

விவாதம் இன்றும் தொடர்ந்து பிற்பகலில் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் பல கிராமங்களை நோக்கி அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றார்கள்.

மன்னார் - பூநகரி வீதியில் வாழும் பெரும் எண்ணிக்கை யான வர்களும் கூட இன்று கிளிநொச்சி நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளனர் என அறிகின்றேன். ஆக இம் முழு பெரும் நிலப்பரப்பும் கிளிநொச்சி மாவட்டம் நோக்கி இடம்பெயரும் துயர நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு உதவிக் கரம் கொடுக்க இன்று யாருமே இல்லை. இந்நிலையில் இவர்களுக்கு உடன் உதவவேண்டியது உங்களது பொறுப்பும், கடமையும் என்பதினால் பின்வரும் விடயங்களை கருத்தில் எடுத்து உடன் செயல்படுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

1. மக்கள் குடியிருப்புகள் மீதான விமானத் தாக்குதல்கள், ஆட்லறி ஷெல் தாக்குதல்கள், கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் தாக்குதல்களை நிறுத்தி ஆண், பெண், பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.

2. இடம்பெயரும் மக்களின் அத்தியாவசிய தேவைகளாகிய உணவு,மருந்து, இல்லிட வசதிகளை மேற்கொள்ள கிளிநொச்சி அரச அதிபருக்கும் அவர் சக உத்தியோகஸ்தர்களுக்கும் வேண்டிய உத்தரவையும், பொருளாதார 'வளத்தையும் அனுப்பி வையுங்கள்.

3. ஐ.நா.சபைகளின் தொண்டு நிறுவனங்கள், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடியாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று துன்பப்படும் மக்களின் துயர் துடைப்புப் பணியை மேற்கொள்ள அறிவுறுத்தல்களையும் அவர்களின் பாதுகாப்பான போக்குவரத்தையும் உறுதி செய்யுங்கள்.

ஈற்றில் சிக்கல்கள் - குழப்பங்கள் நிறைந்த எம் நாட்டிற்கு நிலையான அமைதி வேண்டும் என்பதே எமது ஆவல். அதற்காகத் தாங்கள் ஆற்றிவரும் சேவைக்கு எமது நன்றிகள். - என்று உள்ளது. (அ)

## 'சார்க்' வேளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்த விடயம் தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பு நகரில் சார்க் மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தற்போது அரசினால் மும்முரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மாநாட்டை சாட்டாக வைத்துக்கொண்டு கொழும்பில் தமிழர்கள் பலர் தேவையில்லாமல் கைதுசெய்யப்படுகின்றனர். அத்துடன், நையப்புடைக்கப்பட்டும் வருகின்றனர்.

அத்தியாவசியத் தேவைகள் மற்றும் வைத்தியத் தேவைகள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக பிற மாவட்டங்களில் உள்ள தமிழர்கள் கொழும்பு மாவட்டத்திற்கு சார்க் மாநாடு முடியும்வரை செல்லவேண்டாம் என நான் மக்களிடம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு தென்பகுதியில் பல தடைகளை விதித்துக் கொண்டிருக்கின்றது. ரயில் பயணங்கள் கடைசிவரை செல்லாது இடைநடுவில் நிறுத்தப்படுகின்றன. பஸ்களில் பயணிப்பவர்கள் மோசமான கெடுபிடிகளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் தாய்மார்கள் என்று வயது வித்தியாசமின்றி கைதுசெய்யப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

எனவே, சார்க் மாநாடு இடம்பெறும் காலங்களில் மக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன்- என்றார். (அ)

## 'சார்க்' மாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

### ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தப்படும் தற்காப்புப் போர் நம்முடையது

கடந்த அறுபது ஆண்டுகளாகத் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கச் சிங்கள அதிகாரபீடம் மறுத்துவருகின்றது. தமிழருக்கு நீதி வழங்கச் சிங்களதேசம் தயாராக இல்லை. சிங்களத் தேசத்தின் அரசியல் இன்று போராகப் பேய்வடிவம் எடுத்து நிற்கிறது. இனவாதச் சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கை கொண்டு நிற்பதால், போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து விரிவாக்கம் பெற்றுவருகிறது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அடிமை கொள்ளவேண்டும் என்பதில் சிங்களதேசம் வெறிகொண்டு நிற்கிறது. சிங்கள தேசம் ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப் போரை எதிர்த்து, எமது விடுதலை இராணுவம் ஒரு தற்காப்புப் போரையே இன்று நடத்திவருகிறது.

சிங்கள அரசு போர் என்ற போர்வையில் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்து வருகிறது. ஒட்டுமொத்தத் தமிழினமும் படிப்படியாக ஒடுக்கப்பட்டு, அழிக்கப்பட்டுவரும் கோரமான உண்மை இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. செய்தித் தடை என்ற பெயரில் தமிழரின் நீதியான போராட்டம் மீது ஒரு இரும்புத்திரை போடப்பட்டிருக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கத்தையும் அது நெறித்துள்ள விடுதலைப் பாதையையும் களங்கப்படுத்தும் வகையில் போலியான, பொய்யான பரப்புரை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இதனால், தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றி உலகில் தவறான மதிப்பீடுகளும், தப்பான அபிப்பிராயங்களும் நிலவிவருகின்றன. இது எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகிறது.

### நட்புறவை வளர்க்கவே விரும்புகின்றோம்

உலக நாடுகளுடனும் எமது பிராந்திய அயல் நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக்கொள்ளவே நாம் என்றும் விரும்புகிறோம். இதற்கான புறநிலைகளை உருவாக்கி, ஒரு நட்புறவுப் பாலத்தைக் கட்டியெழுப்புவதிலும் இதயசுத்தியோடு இருக்கிறோம். தமிழீழ தேசத்தினதும் தமிழீழ மக்களினதும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்துவிட விரும்புகிறோம். இந்த நல்லெண்ண நடவடிக்கையாக, சார்க் மாநாடு நடைபெறுவதையிட்டு ஜூலை 26 முதல் ஓகஸ்ட் 04 வரையான காலப்பகுதியை இராணுவ நடவடிக்கைகள் அற்ற அமைதி நாள்களாகக் காத்து, ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, மாநாடு வெற்றிபெற ஒத்துழைப்போம் என்பதை எமது விடுதலை இயக்கம் மகிழ்ச்சியோடு அறியத் தருகிறது.

இதேநேரம், சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் எமது தேசத்தினதும் எமது மக்களினதும் நல்லெண்ண நடவடிக்கையை மதிக்காது, அத்துமீறி அடாவடியான வலிந்த தாக்குதல்களில் ஈடுபட்டால், எமது மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் தற்காப்பு நடவடிக்கையில் மாத்திரம் ஈடுபட எமது விடுதலை இயக்கம் நிர்ப்பந்திக்கப்படும். மாநாடு வெற்றியாக அமைய வாழ்த்துவதோடு, எமது பிராந்தியத் தைச் சேர்ந்த இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலை தீவு ஆகிய நாடுகளுக்கு எமது நல்லாதரவையும் தெரிவித்துக்கொள்கிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-உ)


மாபெரும் கருத்தரங்கு
A/L.2008
அரசியல்
K.S. இளங்கோ
மற்றும் முன்னணி ஆசிரியர் குழு
காலம்: 24.07.2008 (வியாழன்) 9 a.m.- 2 p.m.
DMI நாவலர் வீதி, யாழ்.
(76560)

A/L 2008
சகலதுறைகளுக்குமான பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்
விற்பனையில்
தொகுப்பு: த.தவசேகர்
★ பிரபல புத்தக நிலையங்களிலும், ஆசிரியரின் வகுப்புகளிலும் ரூபா 125 இற்கு பெற்றுக்கொள்ளலாம்.
(76498)

கருத்தரங்கு
தமிழ்
திரு.குழந்தை
காலம்
23.07.2008 - புதன்
28.07.2008 - திங்கள்
9.00 a.m.
யூனிவேர்சல்
பா/இந்துமகளிர் கல்லூரி அருகில்

வணிகக்கல்வி-II
திரு.யசோ
காலம்
26.07.2008 - சனி
8.30 a.m.
★ வெளி மாணவரும் பங்குபற்றலாம்.
★ எதிர்பார்க்கை வினாக்கள் ஆய்வு.
★ முன்னணி ஆசிரியர் சேவை.

வெற்றி இலக்கு - 05
2 ஆம் தவணைப் பயிற்சிப் பரீட்சை
தரம் 1,2,3,4,5 (17ஆவது) வினாத்தாள்கள் வெளியாகிவிட்டன. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளளாம்.
தயா அச்சகம்
138, நாவலர் றோட் (மனோகராச் சந்தி/நாவலர் பாடசாலை முன்பாக), யாழ்ப்பாணம்.

G.C.E A/L 2008 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான
பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி-2008
வெளிவந்துவிட்டது
★ பத்து வருட வரலாற்றில் 14 நூல்கள் 10,000 பிரதிகள்
★ இலங்கையில்வெளியிடப்படும் முதல்தர தமிழ் மொழி நூல்
ஆக்கம் P. உமாசங்கர் & காமல்தாசன்
கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம், தூர்க்கா, அன்னை, ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம் புத்தகசாலை.
(இலங்கையில் எப்பாகத்திலும் வேகமான விற்பனையில்)
★ மிகத்தரமான சிறந்த நன்மதிப்பைப் பெற்ற நூல்
(76559)

UNIT
Jaffna | Nelliady
Now Available
UNISTA
Intel 945Gc Mother board, Intel 1.8Ghz processor, 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS
UNIPRO
Asus Intel 945Gc Mother board, Intel Dual Core 2.0Ghz 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, ATX Casing with SMPS & UPS
UNIDLX
Intel Classic Main Board, Core 2 Duo 2.2Ghz, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, 17" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
UNISPL
Intel Classic Board, Core 2 Duo 2.6Ghz Extreme, 2Gb DDR2, 250Gb Hdd, DVD-RW, 17" LCD, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
Tables, Chairs & UPS
Printer & Scanners
Hp D1460, HP P1005 Laserjet
Canon Lide 25, HP G2410
HP All in One (3 In One)
HP All in One (4 In One)
Others
Keyboards, Mouse Optical Speaker
Woofers Creative & MicroLab
Monitors
15", 17 Samsung / Viewsonic Semi / Flat CRT,
17" Samsung LCD Wide
128Mb AGPVGA
19" Samsung LCD Wide
256Mb PCI EXPRESS VGA
We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, ☎ 4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy ☎ 2264871


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org